# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

# 2024




## ශ්‍රී ලංකාවේ ජාතික බුද්ධිමය දේපළ කාර්යාලය
## இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்
## National Intellectual Property Office of Sri Lanka

වෙළෙඳ, වාණිජ, ආහාර සුරක්ෂිතතා සහ සමුපකාර සංවර්ධන අමාත්‍යාංශය
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு, மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு
**Ministry of Trade, Commerce, Food Security and Co-operative Development**

# வருடாந்த செயலாற்றுகை

# அறிக்கை 2024

**இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்**

**3 ஆவது மாடி, “சமாகம் மெதுர”, இல.400, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10,**

**இலங்கை**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2024

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

அ.நி.சு. 02/2020 வழிகாட்டல் இலக்கம் 14 மற்றும் அ.நி.சு. 01/2020 வழிகாட்டல் இலக்கம் 05 மாதிரிகளுக்கு அமைய இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு உள்ளது.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. அத்தியாயம் | தாபன ரீதியான கண்ணோட்டம் | 1 |
| 02. அத்தியாயம் | செயலாற்றுகை மற்றும் தொலை நோக்கு | 17 |
| 03. அத்தியாயம் | ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை | 43 |
| 04. அத்தியாயம் | செயலாற்றுகைக் குறிகாட்டிகள் | 69 |
| 05. அத்தியாயம் | புலமைச் சொத்து அலுவலகத்தினால் அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள் | 73 |
| 06. அத்தியாயம் | மனித வளக் கண்ணோட்டம் | 75 |
| 07. அத்தியாயம் | இணக்கப்பாட்டு அறிக்கை | 79 |
| 08. அத்தியாயம் | விஷேட நிகழ்வுகள் | 101 |

## பணிப்பாளர் மா அதிபதியின் செய்தி

இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் (NIPO) 2024 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்கீட்டு அறிக்கை என்பவற்றை சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியை உருவாக்குவதில் புலமைச் சொத்துக்களின் முக்கியத்துவம் வெகுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக, உலகெங்கிலுமுள்ள புலமைச் சொத்து அலுவலகங்கள் தற்போது தமது நாடுகளில் பயனுறுதிமிக்கதும் சமநிலையானதுமான புலமைச் சொத்து முறைமைகளை நிறுவ தீவிர பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

இப்பின்னணியில், நியாயமற்ற போட்டியைக் குறைத்து வியாபாரம் மற்றும் வர்த்தகத்தில் தேசிய போட்டித்தன்மையை மேம்படுத்தும் வகையில், புலமைச் சொத்துக்கள் தொடர்பான வலுவான சட்டக் கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம், தொழில்நுட்ப முன்னேற்றத்தின் நன்மைகளை அனைத்து இலங்கையர்களுக்கும் கிடைக்கச் செய்வதற்கு இலங்கை புலமைச் சொத்துக்கள் அலுவலகம் மிகத்தீவிர முயற்சிகளை மேற்கொள்கிறது.

இலங்கையிலுள்ள அனைத்து வகையான புலமைச் சொத்துசார் உரிமைகளையும் நிர்வகிக்கும் அதிகாரமளிக்கப்பட்ட ஒரே அரசாங்க திணைக்களமாக தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம் காணப்படுகிறது. இலங்கையர்களின் தற்போதைய, எதிர்கால தேவைகளுடன் இணங்கிச் செல்லும் வகையில், மிக அவசியமானதும் உரிய காலத்திற்கேற்றதுமான திருத்தங்களையும்



புதிய ஒழுங்குவிதிகளையும் தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்கு இவ்வலுவலகம் பரிந்துரைக்கிறது.

அதனுடைய முயற்சிகளின் ஒரு பகுதியாக, உலக புலமைச் சொத்து அமைப்பினால் (WIPO) நிர்வகிக்கப்படும் "மெட்ரிட் நெறிமுறை" இற்கான அணுகலை இயலுமாக்கும் வகையில் புலமைச் சொத்துச் சட்டம் திருத்தப்படுகிறது. இது உலக புலமைச் சொத்து அமைப்பினூடாக (WIPO) உள்நாட்டு வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியாக பதிவு செய்வதற்கும், சர்வதேச வியாபாரச் சின்னங்களை இலங்கையில் பதிவு செய்வதற்கும் வசதியளிக்கும்.

கடந்த ஆண்டில், உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பு மற்றும் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம் என்பவற்றின் அவதானிப்புகளை ஒருங்கிணைத்த வகையிலான வரைவுச் சட்ட மூலங்கள் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், கலைஞர்களுக்கு அவர்களின் படைப்புகளுக்கு ரோயல்டி வழங்குவதை முறைப்படுத்தும் நோக்கத்துடன், இது கூட்டு முகாமைத்துவ அமைப்புகள் (CMO's) மற்றும் பதிப்புரிமை தொடர்பான கூட்டு

முகாமைத்துவ அமைப்புகளுடன் (CMO's) பரந்த பட்ட கலந்துரையாடல்களில் ஈடுபட்டு அதனடியாக புதிய ஒழுங்கு விதிகள் வரையப்பட முடியும்.

குறிப்பாக ஏற்றுமதித் துறையை மேம்படுத்துவதற்கான ஒரு ஊக்கியாக அமையவுள்ள இலங்கையில் தோற்றம் பெறுகின்ற புவியியல் சார்ந்த சுட்டிக்காட்டுகைகளை பதிவு செய்வதற்காக திருத்தப்பட்ட புலமைச்சொத்துக்கள் சட்டம் தொடர்பான ஒழுங்குவிதிகளை வரைவதற்காக புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் அவதானிப்புகள் மீளாய்வுக்குரிய ஆண்டில் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, புவியியல் சார்ந்த சுட்டிக்காட்டுகைகளை பதிவு செய்வதற்காக புதிய ஒழுங்குவிதிகளை வெளியிட முடிந்தது. "சிலோன் சினமன்" மற்றும் "சிலோன் தேயிலை" போன்ற புவியியல்சார் சுட்டிக்காட்டுகைகளின் பாதுகாப்பினை உறுதிசெய்வதன் மூலம், எதிர்காலத்தில் ஏற்றுமதித் துறையில் நியாயமற்ற போட்டியினை குறைப்பதற்கு இயலுமாக இருக்கும்.

மேலும், கடந்த வருட காலப்பகுதியில், நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் பிரதேச செயலகங்களுடன் இணைந்து ஒன்லைன் அடிப்படையில் புலமைச் சொத்து தொடர்பான பல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. எனவே, இது பொது மக்களிடையே, குறிப்பாக தொலைதூர பகுதிகளில் புலமைச் சொத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. தமிழ்ப் பிரதேசங்களுக்காக ஆங்கிலத்தில் நடாத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு நேரடி தமிழ் மொழிபெயர்ப்புகளை வழங்குதல் போன்ற ஆக்கபூர்வமான முயற்சிகளின் மூலம் பெரியளவில் உற்பத்தித்திறனை அடைய முடியும்.

கடந்த வருடத்தினுள் நாடு முகங்கொடுத்த சமூக மற்றும் பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் பணியாட்டொகுதியினரால் வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்த சேவையை வழங்க முடிந்தது. சில துறைகளில் 100% நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தை அடைய முடிந்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் நிரல் அமைச்சான வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சிற்கும், புலமைச் சொத்து ஆலோசனை ஆணைக்குழுவிற்கும் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் முன்னேற்றத்திற்காக அவர்களினால் வழங்கப்படும் வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றிற்காக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, புத்தாக்க முயற்சிகள் சமூக மேம்பாட்டிற்காக வினைத்திறனாக பயன்படுத்துகின்ற மேம்பட்ட உலகொன்றை உறுதிப்படுத்துவதற்கு எம்முடன் அணிசேர்ந்து ஒன்றாக பணியாற்றுவதற்கு நான் உங்களை அன்புடன் அழைக்கின்றேன்.



எச்.எஸ்.ஹெட்டிஹெலகே
புலமைச் சொத்து பணிப்பாளர் மா அதிபதி
(பதில்கடமை)

# அத்தியாயம் 1




## • தாபன ரீதியான கண்ணோட்டம்

1.1 அறிமுகம்

1.2 தொலை நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

1.3 பிரதான பணிகள்

1.4 நிறுவன கட்டமைப்பு

1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- வியாபாரச் சின்னங்கள் பிரிவு
- ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவு
- தகவல் தொழில்நுட்பப் பிரிவு
- தாபனப் பிரிவு
- கணக்குகள் பிரிவு
- திட்டமிடல் பிரிவு

1.6 திணைக்களத்தின் கீழான நிதிகள்

1.7 வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்களின் விபரங்கள்

## 1.1 அறிமுகம்

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் இலங்கையின் புலமைச் சொத்துக்கள் கட்டமைப்பினை நிருவகித்தல் தொடர்பான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. இது வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு, மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகிறது எந்தவொரு நாட்டினதும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில், குறிப்பாக இன்றைய அறிவுசார் பொருளாதாரத்தில் புலமைச் சொத்து முக்கியமானதும் தனித்துவமானதுமான வகிபாகத்தினை வகிக்கின்றது. மானிட முயற்சிகள் செயற்படுத்தப்படும் ஒவ்வொரு துறையிலும் முதலீடு, புத்தாக்கம் மற்றும் ஆக்கபூர்வமான செயற்பாடு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் அறிவுப் பாய்ச்சலின் தேவைப்பாடு என்பனவற்றின் தேவையை தற்போது இலங்கை எதிர்நோக்கியுள்ளது. இச்சூழலில், மீளாய்விற்கு உட்படுத்தப்படும் 2024 ஆம் ஆண்டில் இலங்கை புலமைச் சொத்துக்களின் நிருவாகத்திற்காக தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான சுருக்கமான விபரம் ஒன்று மேற்படி அறிக்கையின் மூலம் முன்வைக்கப்படுகின்றது.

புலமைச் சொத்துக்கள் என்பவை அதற்கே உரித்தான விஷேடமான பண்புகளைக் கொண்ட ஒரு வகைச் சொத்தாகும். மனித அறிவாற்றலின் உருவாக்கத்திலிருந்து எழும் சட்டரீதியாக அமுல்படுத்தக்கூடிய உரிமைகளின் தொகுப்பினை இது குறிக்கிறது. இலக்கியம், கலை அல்லது விஞ்ஞான ரீதியான பணிகள், சமகாலக் கலைஞர்களின் நாடகக் காட்சி நிகழ்ச்சிகள், ஒலிப்பதிவு வட்டுக்கள், ஒலிபரப்புதல்கள், புத்தாக்கங்கள், கைத்தொழில் வடிவமைப்புக்கள், வியாபாரச் சின்னங்கள், சேவைச் சின்னங்கள், வர்த்தகப் பெயர்கள் மற்றும் பதவிகள், அநீதியான போட்டிக்கு எதிரான பாதுகாப்பு, புவியியல் ரீதியான சுட்டிக்காட்டுதல்கள், புதிய தாவரக் குறிகாட்டிகள், வெளிப்படுத்தப்படாத தகவல்கள் மற்றும் இணைந்த சுற்றுக்களின் அமைப்புத்திட்ட வடிவமைப்புக்கள் போன்ற துறைகளுக்கு உரிய உரிமைகள் இதில் உள்ளடங்கும்.

தனிநபர்களினால் உரிமைகொள்ளப்படும் ஏனைய வகையான சொத்துக்களினது பல்வேறு பண்புகளை புலமைச் சொத்தும் கொண்டுள்ளது. உதாரணமாக, இது ஒரு சொத்தாக கருதப்படுவதுடன், குறிப்பிடத்தக்க நிதி பெறுமதியினையும் கொண்டிருக்க முடியும். தொட்டுணர முடியுமான சொத்தைப் போலவே, புலமைச் சொத்தினை கைப்பற்றிக் கொள்ளவும், கைமாற்றிக் கொள்ளவும் விற்கவும், ஏனையவர்களுக்கு உரிமம் வழங்கவும் முடியும்.

இருப்பினும், புலமைச் சொத்தானது ஏனைய பௌதீக சொத்தினைப் போலல்லாது தொட்டுணர முடியாததாக காணப்படுவதுடன், அதனை பௌதீக பண்புகளால் வரையறுக்கவோ அல்லது அளவிடவோ முடியாது. புலமைச் சொத்து பாதுகாப்படுவதற்கான தகுதியினைப் பெற ஒரு குறிப்பான, தொட்டுணரக்கூடிய

வடிவத்தில் அல்லது தெளிவாக வரையறுக்கப்பட்ட முறையின் மூலம் வெளியிடப்பட வேண்டும்.

புலமைச் சொத்து பிரதானமாக இரண்டு பிரதான பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது:

1. **கைத்தொழில்சார் சொத்துக்கள் -** புத்தாக்கங்களுக்கான ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள், வியாபாரச் சின்னங்கள் மற்றும் சேவைச் சின்னங்கள், கைத்தொழில் வடிவமைப்புக்கள் மற்றும் புவியியல் ரீதியான சுட்டிக்காட்டுதல்கள் என்பன இதில் உள்ளடங்குகின்றன.

2. **தொடர்பான உரிமைகள் மற்றும் அண்டைய உரிமைகள் -** இது இலக்கிய, கல்வி மற்றும் கலைப் படைப்புகள்; ஒலிப்பதிவுகள்; கலைஞர்களின் நிகழ்த்துகைகள்; மற்றும் தயாரிப்பாளர்கள் மற்றும் ஒளிபரப்பு நிறுவனங்களின் உரிமைகள், என்பவற்றை உள்ளடக்கியுள்ளதுடன், கூட்டாக தொடர்பான / அல்லது அண்டைய உரிமைகள் என குறிப்பிடப்படுகிறது

## 1.2 தொலை நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

### தொலை நோக்கு

படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கம் என்பவற்றினை ஊக்குவிப்பதனூடாக இலங்கையை வளர்ந்துவரும் பொருளாதாரமொன்றாக உருவாக்குதல்.

### செயற்பணி

புலமைச் சொத்துக்களின் ஆக்கம், பாதுகாப்பு மற்றும் வணிகமயமாக்கல் என்பவற்றின் ஊடாக பொருளாதார நிலைபேற்றுத் தன்மையினை ஊக்குவிக்கும் புலமைச் சொத்துக்கள் கட்டமைப்பு ஒன்று தாபிக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

### நோக்கங்கள்

- தேசியரீதியான ஆக்கத்திறனை மேம்படுத்தல்.
- நியாயமான வர்த்தகத்திற்கான வசதிப்படுத்தல்.
- முதலீட்டு ஊக்குவிப்பு
- நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அறிவினை முதன்மையாகக் கொண்ட உலகளாவிய செயற்பாடுகளுடன் தேசிய பொருளாதாரத்தினை ஒன்றிணைத்தல்.

## 1.2 பிரதான பணிகள்

- வியாபாரச் சின்னங்கள், ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள், கைத்தொழில் வடிவமைப்புக்கள் என்பவற்றினைப் பதிவு செய்தல் மற்றும் ஒன்றிணைந்த முகாமைத்துவ சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் நிருவகித்தல் உட்பட புலமைச் சொத்துக்களை நிருவகித்தல்.

- புலமைச் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் பிரபல்யம் செய்தல்.

- புலமைச் சொத்து விடயம் தொடர்பான அறிவினை விருத்தி செய்தல்.

- பொருளாதார விருத்திச் செயற்பாட்டிற்காக புலமைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதனை விருத்தி செய்தல்.

- புலமைச் சொத்துக்கள் சார் இலங்கையின் சர்வதேச பொறுப்பினை நிறைவேற்றல் மற்றும் அது தொடர்பான வலய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பினை விருத்தி செய்தல்.

- புலமைச் சொத்துக்கள் தொடர்பான கொள்கைகளை முன்மொழிதல்.

- வெளியீட்டு உரிமை மற்றும் தொடர்புடைய உரிமைகள் தொடர்பான துறையில் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல், புலமைச் சொத்துக்கள் தொடர்பான உரிமைகளை அமுல்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல் .

- புலமைச் சொத்துக்கள் முகவர்களைப் பதிவு செய்தல் மற்றும் நிருவகித்தல்.

## 1.3 நிறுவனக் கட்டமைப்பு



### 1.4 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- **வியாபாரச் சின்னங்கள் பிரிவு**
- **ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவு**
- **தகவல் தொழில்நுட்பப் பிரிவு**
- **தாபனப் பிரிவு**
- **கணக்குகள் பிரிவ**
- **திட்டமிடல் பிரிவு**

<u>**வியாபாரச் சின்னங்கள் பிரிவு**</u>




வியாபாரச் சின்ன பிரிவானது வியாரச் சின்னங்களினதும் கைத்தொழில்சார் சொத்துக்களது வகைக்குள் அடங்கும் சேவைச் சின்னங்களதும் பதிவினை கண்கணிப்பதன் மூலம் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினுள் முக்கிய வகிபாகமொன்றை வகிக்கிறது.

பணிப்பாளர் (சட்டம்) அவர்கள் மேற்படி பிரிவிற்குத் தலைமை வகிப்பதுடன், மூன்று உதவிப் பணிப்பாளர்களின் (சட்டம்) நேரடிக் கண்காணிப்பின் கீழ், நான்கு புலமைச் சொத்து உத்தியோகத்தர்கள், பன்னிரெண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், இரண்டு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், அலுவலகப் பணியாளர் சேவையிலுள்ள ஐந்து உத்தியோகத்தர்கள் ஆகியோரினை உள்ளடக்கிய பதவியணி ஒன்றினால் மேற்படி பிரிவின் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

வியாபாரச் சின்னத்தின் பதிவுக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பமொன்று பதிவு செய்யப்படுவதற்கும், பத்து வருடங்களின் பின் புதுப்பிக்கப்படுவதற்கும் புலமைச் சொத்துக்கள் சட்டத்தினது நிர்ணயிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க சிக்கலான செயல்முறையொன்றுக்கு உட்படுகிறது. குறித்த செயல்முறையானது கீழ்வருமாறு விவரிக்கப்படுகிறது,

1. சட்டத்தின் 106-110 வரையான பிரிவுகளுக்கு ஒத்தியங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்துக் கொள்வதற்காகப் பரீட்சித்தல்.

2. அடிப்படையில் பிரதான பிழைகள் இல்லாத விண்ணப்பங்கள், சட்டத்தின் 103 மற்றும் 104 ஆம் பிரிவுகளின் கீழ் தேடல் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டு சின்னத்தினை

ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் கடிதங்களை வழங்குதல்.

3. ஏற்றுக் கொள்ளப்பட்ட வியாபாரச் சின்னங்களை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக உரிய வர்த்தமானி அறிவித்தல்களைத் தயாரித்தல்.

4. ஒரு தரப்பு / இரு தரப்பு விசாரணைகளை நடாத்துதல்.

5. சின்னம் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர், எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட்டிராத, உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, வியாபாரச் சின்னங்களைப் பதிவு செய்வதற்காக முன்வைத்து பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல்.

6. குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டதன் பின்னர் 10 வருடங்களுக்கு ஒரு முறை பதிவினைப் புதுப்பிப்பதற்கான சான்றிதழ்களை வழங்குதல்.

7. வியாபாரச் சின்ன ஒப்படைப்புக்கள், பெயர்/ முகவரி மாற்றல்கள் மற்றும் அனுமதிப்பத்திர ஒப்பந்தங்களை அறிக்கையிடுதல்.

8. புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி அவர்கள் சார்பில் நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கோரிக்கை விடுத்தல் மற்றும் அதனோடு தொடர்பான ஆவணங்கள் மற்றும் சான்றுகளை அவர்களுக்கு வழங்குதல் மற்றும் வியாபாரச் சின்னங்கள் சார் பிரச்சினைகளின் போது உரிய அரச தாபனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

9. வியாபாரச் சின்னங்கள் தொடர்பான விழிப்புணர்வூட்டல்களுக்குரிய

10. கருத்தரங்குகள் / செயலமர்வுகள் / கூட்டத்தொடர்கள் / கண்காட்சிகள் ஆகியவற்றில் பங்குபற்றல்.

11. வியாபாரச் சின்னங்களுக்குரிய புள்ளிவிபரவியல் மற்றும் ஏனைய தரவுகளைத் தயாரித்தல் மற்றும் பேணிவருதல் மற்றும் தேவையான தரப்பினர்களுக்கு குறித்த உரிய தகவல்களை வழங்குதல்.

**ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவு**



ஆக்கவுரிமை விண்ணப்பங்களைப் பரீட்சித்தல், ஆக்கவுரிமை அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், கைத்தொழில் வடிவமைப்புக்களுக்குரிய விண்ணப்பங்களைப் பரீட்சித்தல் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்களைப் பதிவு செய்தல் ஆகிய பணிகள் ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவின் பிரதான பணிகளாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எனும் இரு வகைகளின் கீழ் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திடம் கோப்பிடப்படும் ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்களின் விண்ணப்பங்களைப் பரீட்சிப்பதற்காக இந்தப் பிரிவிற்கு அனுப்பப்படும். அவ்வாறே இலங்கையானது 1982 ஆம் ஆண்டு முதல் ஆக்கவுரிமைகள் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் (PCT) உறுப்பு நாடு ஒன்றாவதுடன் மேற்படி ஒப்பந்தத்தின் கீழ் வெளிநாட்டு விண்ணப்பதாரர்களினால் இந்த நாட்டில் பதிவு செய்வதற்காக கோப்பிடப்படும் விண்ணப்பங்களும், பாரிஸ் சமவாயத்தின்கீழ் கோப்பிடப்படும் ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்களின் விண்ணப்பங்களும் இந்தப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படும். ஆக்கவுரிமை தகவல் மற்றும் தொழில்நுட்ப அறிவுக்கான அணுகலை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க ஆதரவு மையம் (TISC) கருத்திட்டத்தையும் இப்பிரிவு நடைமுறைப்படுத்துகிறது.

இந்தப் பிரிவு பணிப்பாளர் (தகவல் மற்றும் பரீட்சிப்புக்கள்) அவர்களினால் தலைமை தாங்கப்படுவதுடன், இரண்டு உதவிப் பணிப்பாளர்களும் (தகவல் மற்றும் பரீட்சிப்புக்கள்), அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 11 பேரும், முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் ஒருவரும், ஒரு கணினிப் பயிற்சி உத்தியோகத்தரும், அலுவலகப் பணியாளர்கள் ஒருவரும் பணிபுரிகின்றனர்.

இந்தப் பிரிவு ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களைப் பேணி வருவதுடன் புலமைச் சொத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒத்தியங்கும் வகையில் உரிய தகவல்களை சாதாரண பொதுமக்கள், பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தரப்பினர்களுக்கு இடையில் பகிர்ந்தளிக்கும் பொறுப்பினையும் வகிக்கின்றது.

## தகவல் தொழில்நுட்பப் பிரிவு



புலமைச் சொத்துக்களினது நிர்வாகச் செயல்முறையினது பல்வேறு கட்டங்களிலும் தகவல் தொழிநுட்பம் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது.அதற்கிணங்க, புலமைச் சொத்து அலுவலகத்தினால் பயன்படுத்தப்படும் புலமைச் சொத்து நிர்வாக முறைமையினை (IPAS) இற்றைப்படுத்துவது தகவல் தொழிநுட்ப பிரிவினது பொறுப்பாகும். இலத்திரனியல் விண்ணப்ப கோப்பிடல், உத்தியோகபூர்வ வலைத்தளத்தை இற்றைப்படுத்திய தகவல்களுடன் பேணுதல், மற்றும் அலுவலகத்தின் நிறுவனரீதியான செயற்பாடுகளுக்கான தகவல் தொழிநுட்ப உதவியினை வழங்குதல் என்பவற்றுக்கான அத்தியாவசியமான ஆதரவினையும் இப்பிரிவு வழங்குகிறது.பணிப்பாளர் (தகவல்கள் மற்றும் பரீட்சிப்புக்கள்) தலைமை வகிக்கும் மேற்படி பிரிவானது, உதவிப் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) ஒருவரையும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவரையும், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவரையும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர் ஒருவரையும் உள்ளடக்கி உள்ளது.

## தாபனப் பிரிவு



திணைக்களத்தின் நோக்கங்களை வினைத்திறனுடனும் மற்றும் விளைதிறனுடனும் அடைந்து கொள்வதற்கு தேவையான மனித வளங்களை முகாமைத்துவம் செய்வது இப்பிரிவின் பிரதான பணியாகும்.

திணைக்களத்தின் தொலைநோக்கு, செயற்பணி என்பவற்றோடு இணைந்து செயற்படும் ஆற்றலும் தகுதியுமிக்க தனிநபர்களை பணிக்கமர்த்துவது இப்பிரிவின் பிரதான குறிக்கோளாகும். மூலோபாயத் திட்டங்களை உருவாக்குதல், ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல், ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, இடமாற்றம், பணிஓய்வு, போன்ற பல்வேறு அம்சங்களை முகாமைத்துவம் செய்தல், மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழு, பொது நிர்வாக அமைச்சு போன்றவற்றினால் காலத்துக்கு காலம் வெளியிடப்படும் கட்டளைகள், வழிகாட்டல்கள், விதிகள் என்பவற்றுக்கிணங்க அலுவலர்களின் செயலாற்றுகை மதிப்பீட்டினை மேற்கொள்ளல் போன்றவை இதனுள் அடங்கும்.

தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகளாக கீழ்வருவனவற்றை குறிப்பிட முடியும்.

- ஆட்சேர்ப்பு நடபடிமுறைகளைக்கிணங்க, பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு
- ஊழியர்கள் தொடர்பான தகவல்களைப் பேணுவதுடன், இரகசியத்தைப் பேணலும்.
- செயலாற்றுகை முகாமைத்துவம்
- ஓய்வுபெற்ற அலுவலர்களின் ஓய்வூதிய கொடுப்பனவை தயார் செய்தல்.
- உள்ளக இடமாற்ற கொள்கையினை நடைமுறைப்படுத்தல்
- திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் நோக்கில் அலுவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்வதற்கான உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களையும், தொடர்புடைய

இணைப்பு செயற்பாடுகளையும் வழங்குதல்.

- திணைக்கள அலுவர்களின் ஒழுக்கம் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகளையும் பேணுதல்

- திணைக்களத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் தொடர்பான நடவடிக்கைகள்

**<u>கணக்குகள் பிரிவு</u>**



மேற்படி திணைக்களத்திற்குக் கிடைக்கும் சகல வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களை உரிய வகையில் வகைப்படுத்தி சரியான முறையில் கணக்குகளில் சேர்த்தல், அலுவலக உத்தியோகத்தர்களின் சம்பள ஊதியங்களை வழங்குதல் மற்றும் புலமைச் சொத்து நிதியத்தின் நடவடிக்கைகள், தாபனத்தின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடல், பெறுகை நடவடிக்கைகள் மற்றும் புலமைச் சொத்து நிதியத்தின் நிதிய முகாமைத்துவம் என்பன கணக்குகள் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள பிரதான பணிகளாகும். மேற்படி பிரிவு கணக்காளர் ஒருவரினால் தலைமை தாங்கப்படுவதுடன், அவரது மேற்பார்வையின் கீழ் உத்தியோகத்தர்கள் 09 பேரும் அலுவலகப் பணியாளர் ஒருவரும் சேவையில் ஈடுபட்டு உள்ளனர்.

## திட்டமிடல் பிரிவு



தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிக் கூற்றுக்களுக்கு ஒத்தியங்கும் வகையில், நோக்கங்களை செயற்படுத்துவதற்கான உபாயமார்க்கத் திட்டத்தினைத் தயாரித்தலென்பது திட்டமிடல் பிரிவினது பிரதான பொறுப்பாகும். நிறுவனத்தின் சாத்திய வளம் மற்றும் அடையாளம் காணப்பட்ட உள்ளார்ந்த அபிவிருத்தி ஆற்றல்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு, நிறுவனத்தின் விஷேட இலக்குகளை செயற்படுத்துவதற்கான வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தினைத் தயாரிப்பதிலும் மிக முக்கிய பங்கினை இப்பிர்வு ஆற்றுகிறது. தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நிகழ்ச்சித் திட்டங்களது மேற்பார்வை மற்றும் பின்னாய்வு என்பவற்றினை மேற்கொள்ளல், செயலாற்றுகையினைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல், விஷேடமாக உலகப் புலமைச் சொத்து அலுவலகத்திடம் (WIPO) சமர்ப்பிக்கப்பட வேண்டிய புள்ளிவிபரவியல் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகளை தேவையான பகுப்பாய்வுகளுடன் முன்வைத்தல் என்பனவும் இப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சேவை பெறுநர் பட்டயத்தினை நிறுவனத்தில் தாபித்தல் என்பவற்றின் மூலம் நிறுவனத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை விருத்தி செய்தல், அதனூடாக நிறுவனம் சார் விளைதிறனை விருத்தி செய்தலும் இப்பிரிவிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ம்நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் உத்தியோகத்தர்களின் செயலாற்றுகையுடன் தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல், நிறுவனத்தின் இலக்குகளுக்கு ஒத்தியங்கும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை அடையாளம் காணல் என்பதும் இப்பிரிவினது பொறுப்பாகும். அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு உரிய கொடுப்பனவு நடவடிக்கைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் பரிந்துரைகளை முன்வைத்தல், பெறுகைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குதல்

என்பனவும் இப்பிரிவினது பெறுப்பாகும்.

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் திட்டமிடல் பிரிவு, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஒருவரையும் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரையும் உள்ளடக்கிய ஓர் அலகாகும்.

## 1.6 திணைக்களத்தின் கீழான நிதிகள்

- ✓ அரசாங்க திரட்டுநிதி – தலைப்பு 299
- ✓ புலமைச் சொத்து நிதி

## 1.7 வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்களின் விபரங்கள்

தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம் - கோப்புக்களை ஸ்கேனிங் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்:

தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகமானது 200,000 இற்கு குறையாத கோப்புக்களை பௌதீக வடிவில் வைத்திருக்கின்றது. இவ்ஆவணங்கள், அவற்றில் பல ரகசியமானவை, மீட்டெடுப்பதற்கு வசதியாக காப்பகங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இவ்வளவு பெரிய அளவிலான பௌதீக பதிவேடுகளை நிர்வகிப்பது நிறுவனத்தின் செயல்திறனை மோசமாக பாதித்துள்ளது. இதன் விளைவாக, இக்கோப்புகளை நிர்வகிப்பதற்குத் தேவையான நேரம் மற்றும் இடம் வதியை குறைப்பதற்காக அவற்றை டிஜிட்டல் மயமாக்க வேண்டிய அவசியம் எழுந்தது.

அதற்கிணங்க, புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் கோப்புகளை ஸ்கேன் செய்வதற்கான கருத்திட்ட முன்மொழிவுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களமும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களமும் அங்கீகாரம் வழங்கியுள்ளன. இரண்டு வருடங்களுக்குள் நிறைவு செய்யப்படும் என மதிப்பிடப்பட்டுள்ள இந்த செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா. 90 மில்லியன் ஆகும்.

இதில் ரூபா. 70.2 மில்லியன் உலக புலமைச்சொத்து அமைப்பினால் தொழில்நுட்ப மற்றும் சேவை நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய ரூபா. 19.8 மில்லியன் புலமைச்சொத்து நிதியத்தினால் நிதியளிக்க முன்மொழியப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவின் பிரகாரம், WIPO இனால் தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குனர்களினூடாக கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், பணியிடத்திலேயே பணிகளை மேற்கொள்வதற்கு சேவை வழங்குனருக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கான பொறுப்பு தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்படுவதாகவும் இருந்தது.

வருடத்தினது மூன்றாவது காலாண்டில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான ஆரம்ப செயற்பாடுகளை முன்னோடி கட்டமொன்றாக தொடங்குவதற்கு இயலச் செய்யும் வகையில், ஸ்கேனிங் செயல்முறைக்கு ஒரு சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுப்பது தொடர்பான கொள்முதல் செயல்முறை புலமைச் சொத்து அலுவலகத்தினால் 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டது.

# அத்தியாயம்

# 2



- **செயலாற்றுகை மற்றும் தொலை நோக்கு**

**நிதி செயலாற்றுகை 2024**

**1.1** **வியாபாரச் சின்னங்கள் சார் பணிகளின் செயலாற்றுகை**

**1.2** **ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை**

**1.3** **கைத்தொழில் வடிவமைப்புக்கள் சார் பணிகளின் செயலாற்றுகை**

**1.4** **விஷேட அடைவுகள்**

**1.5** **சவால்கள்**

**1.6** **எதிர்கால இலக்குகள்**

## நிதி செயலாற்றுகை - 2024

### வருமானம்

31.12.2024 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் மொத்த வருமானம் ரூபா. 308.3 மில்லியனாக காணப்படும் அதேவேளை, இதில் 57.22 % ஆனவை புலமைச் சொத்து நிதியத்தின் வருமான உபரியினை முதலீடு செய்ததன் மூலம் கிடைத்த வட்டியினூடாகவும், மீதி புலமைச் சொத்து சட்டத்தின் கீழான அறவீடுகள் மூலமும் பெறப்பட்டன.

புலமைச்சொத்து சட்டத்தின் மூலம் ஆணை வழங்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதன் மூலம் பெறப்பட்ட வருமானத்தின் 1/3 பகுதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்கத் திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்பட்டதுடன், 2024.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான குறித்த தொகையானது ரூபா. 43.96 மில்லியனாக காணப்பட்டது.

வரைபு 1: 2024.12.31 இல் உள்ளவாறாக மொத்த வருமானம் (ரூ.மில்)




*மூலம் –கணக்குகள் பிரிவின் பதிவுகள்*

## செலவினம்

தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் பணியாட்டொகுதியினருக்கு சம்பளம் செலுத்துவதற்காக திறைசேரியினால் செலவுத் தலைப்பு 299 என்ற தலைப்பின் கீழ் ரூபா. 59.7 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 2024.12.31 இல் உள்ளவாறு எஞ்சிய செலவினம் ரூபா 78.65 மில்லியன் புலமைச் சொத்து நிதியத்தினால் வழங்கப்பட்டது.

வரைபு 2: 31.12.2024 இல் உள்ளவாறாக மொத்த செலவினம் (ரூ.மில்)




*மூலம் –கணக்குகள் பிரிவின் பதிவுகள்*

## 2.1 வியாபாரச் சின்னங்கள் சார் பணிகளின் செயலாற்றுகை

**அட்டவணை - 1 : 2024.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான வியாபாரச் சின்னங்கள் சார் பணிகளின் செயலாற்றுகை**

| செயற்பாடுகள் | | நிறைவேற்றப்பட்ட பணிகள் | | |
|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்டது | உண்மையில் அடையப்பெற்றது | % |
| 1 | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் | 10430 | 12379 | 118.7% |
| 2 | பரீட்சிப்புக்கள் | 11100 | 15547 | 140.1% |
| 3 | விண்ணப்பதாரிகளுக்கு கடிதங்களை அனுப்புதல் (விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் நிராகரித்தல் தொடர்பாக) | 11100 | 14681 | 132.3% |
| 4 | வியாபாரச் சின்னங்கள் தொடர்பான அறிவித்தல்களை அரச வர்த்தமானியில் பிரசுரித்தல் | 8958 | 7475 | 83.4% |
| 5 | வியாபாரச் சின்னங்களை பதிவு செய்தல் | 8622 | 7240 | 84.0% |
| 6 | வியாபாரச் சின்னங்களை புதுப்பித்தல் | 5299 | 7018 | 132.4% |
| 7 | உரிமையாண்மை மாற்றங்களை பதிவு செய்தல் | 1423 | 1472 | 103.4% |
| 8 | பெயர்/ விலாசங்களினது மாற்றங்களை பதிவு செய்தல் | 2557 | 1801 | 70.4% |

*மூலம் - வியாபாரச் சின்னங்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வியாபாரச் சின்னங்கள் பிரிவுடன் தொடர் செயற்பாடுகளின் செயலாற்றுகையினை அட்டவணை 1 வெளிப்படுத்துகிறது.

அதற்கிணங்க, எதிர்பார்க்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 12,379 ஆக காணப்படுவதுடன், இது நிர்ணயிக்கப்பட்ட் இலக்கினைவிட18% அதிகமாகும்.

வியாபாரச் சின்ன பரீட்சிப்புக்களும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விட 40% அதிகரிப்பினை காட்டும் அதேவேளை, வியாபாரச்சின்ன ஏற்புக்கள் நிராகரிப்புக்களும் 32% அதிகரிப்பினைக் காட்டுவதுடன், அவற்றினது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை விஞ்சியுள்ளன.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இலக்குகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. இந்த உயர்ந்த இலக்குகளை நோக்கி செயற்படுவதன் மூலமும், அனைத்து நடவடிக்கைகளிலும் 70% இற்கும் அதிகமான முன்னேற்றத்தை அடைவதன் மூலமும், வியாபாரச்சின்ன பிரிவு 2024 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது என்று முடிவுக்கு வரமுடியுமாக உள்ளது.

## <u>கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்கள்</u>

**அட்டவணை - 2 : ஒவ்வொரு வருடமும் கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை**

| ஆண்டு | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்கள் | 9593 | 9947 | 9466 | 11109 | 12379 |

*மூலம்- வியாபாரச் சின்னங்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

**வரைபு -3 ஒவ்வொரு வருடமும் கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை**




*மூலம்- வியாபாரச் சின்னங்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

மேலேயுள்ள அட்டவணை - 2 மற்றும் வரைபு - 3 என்பவற்றின் மூலம் 2020-2024 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் கிடைக்கப்பெற்றுள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கையினை எடுத்துக் காட்டுகின்றது.

2020 முதல் 2022 வரை நாட்டில் நிலவிய மோசமான சமூக-பொருளாதார சூழ்நிலைகள் காரணமாகவும், கொவிட்-19 பெருந்தொற்றினால் அவ்வப்போது அலுவலகம் மூடப்பட்டிருந்தமையாலும் விண்ணப்பங்களை நிகழ்நிலையில் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன், ஒட்டுமொத்த பொருளாதார தேக்கமானது குறித்த காலகட்டத்தில் விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்களவிலான குறைவுக்கு வழிவகுத்தது

அதன்படி, கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2022

ஆம் ஆண்டில் ஆகக் குறைவான புள்ளியை எட்டியதுடன், அதன்பின்னர் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளமையை 2024 ஆம் ஆண்டினூடாக காணமுடிகிறது. நாடு இயல்பு நிலைக்கு திரும்பிய பின்னர், அலுவலகத்தில் விண்ணப்பங்கள் மீண்டும் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், பொதுமக்கள் தகவல் பகுதி மீண்டும் திறக்கப்பட்டது. இதனால், பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வளர்ச்சியானது ஒட்டுமொத்த பொருளாத விருத்தியினை பிரதிபலிப்பதாக கொள்ள முடியும்.

எனவே, 2024 ஆம் ஆண்டில் நேர்மறையான பொருளாதார போக்குகள் வெளிப்படுவதனைக் கொண்டு, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார காரணிகள் புலமைச் சொத்து நடவடிக்கைகளில் நேரடியாக செல்வாக்கு செலுத்துகின்றன என்று முடிவு செய்யலாம்,

**பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள்**

**அட்டவணை – 3 : கிடைக்கப்பெற்றுள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.**

| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 9593 | 9947 | 9466 | 11109 | 12379 |
| பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 12551 | 4989 | 6414 | 9087 | 15547 |

*மூலம்- வியாபாரச் சின்னங்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

**வரைபு - 4: கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை**




*மூலம்- வியாபாரச் சின்னங்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

மேலேயுள்ள அட்டவணை - 3 மற்றும் வரைபு - 4 என்பவற்றின் மூலம் 2019-2024 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள்

கிடைக்கப்பெற்றுள்ள வியாபாரச்சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பரீட்சிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கு இடையிலான ஒப்பீட்டினை எடுத்துக் காட்டுகின்றது. 2024 ஆம் ஆண்டுக்கு முன்னர் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின எண்ணிக்கையை கடந்து, அதில் ஒரு அதிகரிப்பினை வியாபாரச் சின்ன பிரிவு பதிவுசெய்துள்ளது.

பதிவு செய்வதற்காக அமைப்பமுறையில் சேர்க்கப்பட்ட வியாபாரச் சின்னங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கின்ற அதேவேளை, வியாபாரச் சின்னங்களை பரீட்சித்தல் மிகுந்த சிக்கல்மிக்கதாக மாறியுள்ளது. இந்த சூழலில் வியாபாரச் சின்னங்களை பரீட்சிப்புக்களின் எண்ணிக்கையின் படிப்படியான அதிகரிப்பானது வியாபாரச் சின்ன பிரிவின் செயல்திறனில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியாகவே கருதப்பட முடியும்.

எனவே, இப்பிரிவின் ஏனைய செயற்பாடுகளுக்கிடையில் வியாபாரச் சின்ன பரீட்சிப்பிற்கு முன்னுரிமையளித்தல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான விசேட இலக்குகளை நிர்ணயித்தல் என்பவற்றின் மூலம் இந்த முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது என்பதை தீர்மானிக்க முடியும்.

**வியாபாரச் சின்னங்களின் பதிவுகள்**

**அட்டவணை - 4: பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்**

| ஆண்டு | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|
| உள்நாட்டு | 2734 | 1850 | 2128 | 3761 |
| வெளிநாட்டு | 2729 | 1792 | 1635 | 3479 |

*மூலம்- வியாபாரச் சின்னங்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

**வரைபு - 5: பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்.**




*மூலம்- வியாபாரச் சின்னங்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

அட்டவணை - 4 மற்றும் வரைபு - 5 என்பவற்றின் மூலம் 2020-2024 ஆம் ஆண்டிற்குள் பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களின் எண்ணிக்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்திக் காட்டப்பட்டு உள்ளது.

அதன்படி, முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு சின்னங்களின் எண்ணிக்கையில் சிறிது சரிவு

அவதானிக்கப்பட்டது; ஆயினும், இந்த போக்கு 2024 ஆம் ஆண்டில் தலைகீழாக மாறியது.

புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு வியாபாரச் சின்ன விண்ணப்பம் பதிவு செய்வதற்கு முன் ஒரு சிக்கலான செயல்முறைக்கு உட்படுவதனால், விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட அதே ஆண்டில் பதிவு செய்யப்படாமல் போகலாம்.

இதன் விளைவாக, ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பதிவுகள் முந்தைய பல ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட பற்றிய ஆழ்ந்த அறிவினை வழங்க முடியும்.

இதன்படி, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஈடுபாடு அதிகரித்துள்ளதுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டளவில் நாட்டின் பொருளாதாரத்தில் சாதகமான போக்குகள் உருவாகி வருகின்றன என்று முடிவு செய்ய முடியும். வியாபாரச் சின்ன பிரிவினால் தலைமை தாங்கப்படும் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம் இந்த முன்னேற்றத்திற்கு ஆதரவளிக்க அர்த்தமுள்ள பங்களிப்புகளைச் செய்து வருகிறது.

2024 ஆம் ஆண்டளவில் வியாபாரச் சின்ன பிரிவு முந்தைய ஆண்டில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையை விஞ்சுகின்ற வகையில், பரீட்சித்தல்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் வெற்றி பெற்றது என்பதையும் இது குறிக்கிறது.

## 2.2 ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை

**அட்டவணை - 5: 2024.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை**

| செயற்பாடுகள் | | பௌதீகச் செயலாற்றுகை (நிறைவேற்றப்பட்ட பணிகள்) | | |
|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்டது | உண்மையானது | % |
| 1 | விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல் | 450 | 434 | 96.4% |
| 2 | விண்ணப்பங்கள் தொடர்பான ஆரம்பப் பரீட்சிப்பு (உள்நாட்டு ரீதியில்/ சர்வதேச ரீதியில் / ஆக்கவுரிமைகள் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் (PCT)) | 450 | 712 | 158.2% |
| 3 | புத்தாக்கம் தொடர்பான பரீட்சிப்புக்கள் (விண்ணப்பம் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்கும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து உள்ளதா எனப் பரீட்சித்தல்) | 1200 | 565 | 47.1% |
| 4 | வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக ஜேர்னல்களைத் தயாரித்தல் | 12 | 11 | 91.7% |
| 5 | ஆக்கவுரிமைகள் தொடர்பான அறிவித்தல்களை அரச வர்த்தமானியில் பிரசுரித்தல் | 200 | 156 | 78.0% |
| 6 | ஆக்கவுரிமைச் சான்றிதழ்களைத் தயாரித்தல் | 200 | 187 | 93.5% |
| 7 | பதிவு புதுப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 480 | 849 | 176.9% |
| 8 | பொதுமக்களுக்கான தகவலை வழங்குதல் / உள்ளூர் தரவுத்தளத்தை அணுகுதல் | 250 | 789 | 315.6% |

*மூலம்- ஆக்கவுரிமைகள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

2024 ஆம் ஆண்டு காலப்பகுதின் ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகையினை மேலுள்ள அட்டவணை - 5 வெளிப்படுத்துகிறது.

அதன்படி,எதிர்பார்க்கப்பட்டகிடைக்கப் பெறும் ஆக்கவுரிமைகள் விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் 81% ஆனவை 2024 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றுள்ளன.

அத்துடன் புத்தாக்கம் தொடர்பான பரீட்சிப்புக்கள் தவிர்ந்த ஆக்கவுரிமைப் பிரிவின் ஏனைய அனைத்து செயற்பாடுகளும் 2024 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளில் 75% இற்கும் மேலான அடைவினை பேணக்கூடியதாக உள்ளது. இதன்படி, ஆக்கவுரிமைகள் பிரிவு 2023 ஆம் ஆண்டில் உயர் செயலாற்றலை வெளிப்படுத்தியுள்ளதென்ற முடிவுக்கு வர முடியுமாக உள்ளது.

எனவே, ஆக்கவுரிமை பரீட்சகர்களுக்கான 10 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், ஆக்கவுரிமைகள் பிரிவானது 2024 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை நிரூபித்துள்ளது.

## ஆக்கவுரிமை விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல்

**அட்டவணை - 6 -ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் விபரம்**

| ஆண்டு | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| **விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல்** | 603 | 509 | 431 | 417 | 434 |

*மூலம்- ஆக்கவுரிமைகள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

**வரைபு – 6 ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் விபரம்**




*மூலம்- ஆக்கவுரிமைகள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

அட்டவணை 6 மற்றும் வரைபு என்பன கோப்பிடப்பட்ட ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கையினை வெளிப்படுத்துகிறது.

அதன்படி, 2020 தொடக்கம் 2023 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களினது எண்ணிக்கையில் படிப்படியான குறைவு ஏற்பட்டுள்ள போதும், 2024 ஆம் ஆண்டில் ஒரு அதிகரிப்பு பதிவு

செய்யப்பட்டுள்ளது. வருடாந்த ஆக்கவுரிமை விண்ணப்பங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது நாட்டினது பொருளாதார வளர்ச்சியினது சாதகமான குறிகாட்டியாக காணப்படுவதுடன், இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார பின்னடைவு எதிர்காலத்தில் படிப்படியாக தணியக் கூடும் என எதிர்பார்க்க முடியும்.

## ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் தேடல் பரீட்சிப்பு

**அட்டவணை - 7 கிடைக்கப் பெற்ற மற்றும் தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை**

| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் | 9593 | 9947 | 9466 | 11109 | 12379 | 12379 |
| தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் | 12551 | 4989 | 6414 | 9087 | 15547 | 15547 |

*மூலம்- ஆக்கவுரிமைகள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

***வரைபு - 7: கிடைக்கப் பெற்ற மற்றும் தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை***




*மூலம்- ஆக்கவுரிமைகள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

2019 தொடக்கம் 2024 வரையில் கிடைக்கப்பெற்ற மற்றும் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையினை அட்டவணை 7 மற்றும் வரைபு 7 என்பன வெளிக்காட்டுகின்றன.

பரீட்சிப்புக்களின் எண்ணிக்கையில் 2022 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் குறைவு ஏற்பட்டு வருவதனை அவதானிக்க முடிவதுடன், இது ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்பு பிரிவில் நிலவும் மனித வளப் பற்றாக் குறையினை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

இருப்பினும், 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வுக்குரிய ஆண்டு வரைக்கும் கிடைக்கப்பெற்ற எண்ணிக்கையினையும் விட அதிகமான பரீட்சிப்புக்கள் ஆண்டு தோறும் நடைபெற்றுள்ளதனை மேலுள்ள விளக்கப்படங்கள் விளக்குகின்றன.

பின்னுறுத்தலாகவுள்ள பரீட்சிப்புக்கள் நீண்ட காலத்தில் குறைவடைந்து வரும் அதேவேளை, வினைத்திறன்மிக்க சேவை வழங்கப்படுவதனையும் இது காட்டுகிறது. நிலவுகின்ற 10 ஆக்கவுரிமை பரீட்சகர் வெற்றிடங்கள் அடுத்த வருடத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளமையினால், நிலுவையான பணிகளாகவுள்ள பின்னுறுத்தல்களை வரும் ஆண்டுகளின் தீர்ப்பதற்கு ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்பு பிரிவிற்கு முடியுமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்

**அட்டவணை - 8 : ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்**

| ஆண்டு | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|
| உள்நாடு | 66 | 80 | 59 | 40 |
| வெளிநாடு | 128 | 109 | 141 | 147 |

*மூலம்- ஆக்கவுரிமைகள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

**வரைபு - 8 : ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்**




*மூலம்- ஆக்கவுரிமைகள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

அட்டவணை - 8 மற்றும் வரைபு – 8 என்பவற்றின் மூலம் 2021-2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, முந்தைய இரண்டு வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஆக்கவுரிமை அனுமதிப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கையில் சிறிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ள அதேவேளை, குறித்த வீழ்ச்சியானது உள்நாட்டு விண்ணப்பங்களில் மாத்திரம் ஏற்பட்டுள்ளது. புலமைச் சொத்துரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கோப்பிடப்படும் ஆக்கவுரிமை விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்கு முன்னர் ஒரு சிக்கலான பரிசோதனை செயல்முறைக்கு உட்படுவதுடன், கோப்பிடப்பட்ட ஆண்டுக்கு அடுத்த ஆண்டில் பதிவுசெய்யப்படுவதென்பது பொதுவானதாக காணப்படுகிறது.

2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஆக்கவுரிமை அனுமதிப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கையானது 147 ஆக காணப்படுவதுடன் அவற்றில் 40 உள்நாட்டு அனுமதி பத்திரங்களாகும்.[1]

[1] 2024 ஆம் ஆண்டில் உள்ளவாறு, மொத்தம் 250 உள்நாட்டு ஆக்கவுரிமை விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அவசியமான அளவுகோல்களான புத்தாக்கம், கண்டுபிடிப்பு படிமுறை மற்றும் கைத்தொழில்சார் பிரயோகம் ஆகிய தேவைப்பாடுகளை மதிப்பிடுவதற்கான பரீட்சிப்புக்கள் 265 மேற்கொள்ளப்பட்டிருந்தன. இப்பரீட்சிப்புகளில் 233 விண்ணப்பங்கள் குறைபாடுடையவையாக அடையாளம் காணப்பட்டன.

## 2.3 கைத் தொழில் வடிவமைப்புக்கள் சார் பணிகளின் செயலாற்றுகை

**அட்டவணை - 9: 2024.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான கைத்தொழில் வடிவமைப்புக்கள் சார் பணிகளின் செயலாற்றுகை**

| செயற்பாடுகள் | | பௌதீகச் செயலாற்றுகை (நிறைவேற்றப்பட்ட பணிகள்) | | |
|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்டது | உண்மையானது | % |
| 1 | விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல் | 150 | 213 | 142.0 % |
| 2 | விண்ணப்பங்கள் தொடர்பான ஆரம்பப் பரீட்சிப்பு (உள்நாட்டு ரீதியில்/ சர்வதேச ரீதியில்) | 150 | 262 | 174.7 % |
| 3 | விண்ணப்பங்கள் தொடர்பான முழுமையான பரீட்சிப்பு (பதிவுக்கான தேவைப்பாட்டை விண்ணப்பங்கள் பூர்த்தி செய்துள்ளமையை பரீட்சித்தல்) | 150 | 131 | 87.3% |
| 4 | வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக ஜேர்னல்களைத் தயாரித்தல் | 4 | 3 | 75.0% |
| 5 | கைத்தொழில் வடிவமைப்பு தொடர்பான அறிவித்தல்களை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்தல் | 75 | 75 | 100.0 % |
| 6 | சான்றிதழ்களைத் தயாரித்தல் | 75 | 80 | 106.7 % |
| 7 | விண்ணப்பங்களின் பதிவுகளை புதுப்பித்தல் | 150 | 150 | 100.0 % |
| 8 | பொதுமக்களுக்கான / தேடும் உள்ளூர் தரவுத்தளத்திற்கான தகவலை வழங்குதல் | 50 | 170 | 340.0 % |

*மூலம் - கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

31.12.2024 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான கைத்தொழில் வடிவமைப்புகள் தொடர்பான செயல்பாடுகளின் செயலாற்றுகையினை அட்டவணை 9 காட்டுகிறது.

2024 ஆம் ஆண்டில் விண்ணப்பப் படிவங்களை பரிசீலனை செய்தல் மற்றும் வர்த்தமானியில் வெளியிடுவதற்காக ஜேர்னல்ஸ் தயாரித்தல் என்பவற்றினது மதிப்பிடப்பட்ட இலக்கில் முறையே 87% மற்றும் 75% ஆனவை அடையப்பெற்றது. அனைத்து செயற்பாடுகளும் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகை இலக்கினை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**<u>கிடைக்கப் பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்கள்</u>**

**அட்டவணை - 10: ஒவ்வொரு வருடமும் கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்கள்**

| ஆண்டு | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| கைத்தொழில் வடிவமைப்புக்கள் கிடைக்கப்பெற்றது | 281 | 139 | 159 | 165 | 213 |

*மூலம் - கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

**வரைபு - 9 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்கள்**




*மூலம் - கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

அட்டவணை 10 மற்றும் வரைபு 9 என்பன 2020 தொடக்கம் 2024 வரை ஆண்டு தோறும் கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களினது எண்ணிக்கையை எடுத்துக்காட்டுக்கின்றன. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் விண்ணப்பங்களினது எண்ணிக்கையில் கடுமையானதொரு வீழ்ச்சியினை அவதானிக்க கூடியதாய் இருந்ததுடன், 2021 ஆம் ஆண்டிலிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் படிப்படியாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

2020 முதல் 2022 ஆம் ஆண்டின் முற்பகுதி வரை கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் அதைத் தொடர்ந்த சமூக நெருக்கடி ஆகியவற்றால் விண்ணப்பங்கள் கோப்பிடப்பட்டமை வீழ்ச்சியடைந்ததாக எடுத்துக் கொள்ள முடியுமென்பதுடன், தற்போதுள்ள சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளால் புத்தாக்கத் துறை கணிசமாக பாதிக்கப்படுகிறது என்று முடிவுக்கும் வரமுடியும். 2024 ஆம் ஆண்டில் காணப்பட்ட மேல்நோக்கிய போக்கு படிப்படியான மீட்சி மற்றும் நாட்டின் பொருளாதார நிலப்பரப்பில் நேர்மறையான மாற்றத்தைக் குறிக்கிறது.

## கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் பரீட்சிப்பு

**அட்டவணை - 11: கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை**

| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 281 | 139 | 159 | 165 | 213 |
| பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை` | 288 | 164 | 151 | 131 | 131 |

*மூலம் - கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

**வரைவு - 10 : கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை**




*மூலம் - கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

அட்டவணை 11 மற்றும் வரைபு 10 என்பன 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை வருடந்தோறும் கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றன

அதன்படி, 2021 முதல் ஆண்டுதோறும் பெறப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளபோதும், நடத்தப்பட்ட பரீட்சிப்பிக்களின் எண்ணிக்கைய அதற்கேற்ப அதிரிக்கவில்லை.

ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்பு பிரிவு தற்போது எதிர்நோக்கும் மனித வளங்களின் கடுமையான பற்றாக்குறையே இந்த நிலைமைக்கு பிரதான காரணமாகும். இத்தடைகள் காண்பபட்ட போதிலும் பரீட்சிப்புக்களின் எண்ணிக்கை முந்தைய ஆண்டுகளின் அதே அளவில் பேணப்பட்டமையானது இப்பிரிவினது அடைவொன்றாகவே கருதப்பட வேண்டும். எதிர்வரும் வருடத்தில் ஆட்சேர்ப்பு செய்யவதற்கு திட்டமிடப்பட்டுள்ள 10 ஆக்கவுரிமைகள் உத்தியோகத்தர்களுடன், இப்பிரிவு வரும் ஆண்டுகளில் தற்போதயை பரீட்சிப்பு திறனை பேணவும், அதனை அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது.

## கைத்தொழில் வடிவமைப்புக்களின் பதிவு

**அட்டவணை - 12 : பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்.**

| ஆண்டு | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டு | 122 | 54 | 74 | 127 | 48 |
| வெளிநாட்டு | 29 | 45 | 22 | 18 | 32 |

*மூலம் - கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

**வரைபு - 11: பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்**




*மூலம் - கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவின் தரவுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்ட அறிக்கை 2023 – புலமைச் சொத்து அலுவலகம்*

அட்டவணை – 12 மற்றும் வரைபு - 11 என்பவற்றின் மூலம் 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கையினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்திக் காட்டுகின்றது.

மேலே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி, வெளிநாட்டு பதிவுகளுடன் ஒப்பிடுகையில் அதிக எண்ணிக்கையிலான உள்நாட்டு கைத்தொழில் வடிவமைப்பு பதிவுகள் இடம்பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகிறது. வெளிநாட்டு கைத்தொழில் வடிவமைப்புக்களின் பதிவுகளில் மாத்திரம் 77% அதிகரிப்பு பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் மொத்த பதிவுகளில் ஒட்டுமொத்த சரிவு ஏற்பட்டிருந்தாலும், வெளிநாட்டு பதிவுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளமையானது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அதிகரித்த ஈடுபாட்டைக் குறிக்கிறது.

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் செயலூக்கமான தலையீடுகளால் ஆதரிக்கப்பட்டதான நேர்மறையான பொருளாதார போக்குகளின் வளர்ச்சி 2024 ஆம் ஆண்டளவில் காணப்பட்டதனை இது பரிந்துரைப்பதாக அமைந்துள்ளது.

## 2.4 விசேட அடைவுகள்

### 2.4.1 வியாபாரச் சின்ன பிரிவு

**வர்த்தகச் சின்னங்களின் சர்வதேச பதிவுகள்**

வர்த்தக சின்னங்களின் சர்வதேச பதிவுகள் தொடர்பிலான மெட்ரிட் நெறிமுறையுடன் இணங்கிச் செல்வதனை உறுதி செய்வதற்கு புலமைச் சொத்து சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த உத்தேச திருத்தங்கள் தொடர்பில் கடந்த வருடத்தில் சட்டமா அதிபரின் அவதானிப்புகள் வெற்றிகரமாக பெற்றுக் கொள்ளப்பட்டன. மெட்ரிட் நெறிமுறையுடன் இணங்கிச் செல்வது தொடர்பில் புதிய அரசாங்கத்தினது அமைச்சரவையின் அனுமதியினை அமைச்சு பெற்றுக் கொள்ள வேண்டுமென்று சட்ட வரைஞர் பரிந்துரைத்துள்ளார். அதற்கிணங்க, முன்மொழிவானது அமைச்சரவையினது அனுமதிக்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படும்.

**புவியியல் குறிகாட்டிகள்**

புலமைச் சொத்து சட்டத்தில் புவியியல் குறிகாட்டிகளை பதிவு செய்வது தொடர்பிலான திருத்தங்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன், கடந்த வருட காலத்தில் இந்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் அதற்கான ஒழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. புவியியல் குறிகாட்டிகளின் பதிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை பற்றி பொதுமக்களுக்கு அறிவிக்கும் பொது அறிவித்தல்கள் செய்திப் பத்திரிகைகளிலும் உத்தியோகபூர்வ இணையத் தளங்களிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**கோப்புகளினது டிஜிட்டல் மயமாக்கல்**

புலமைச் சொத்து பதிவேடுகளை டிஜிட்டல்மயப்படுத்துவதனை இலக்காகக் கொண்டு உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பிடமிருந்து கிடைக்கும் தொழில்நுட்ப மானியத்தினால் ஆதரவளிக்கப்படும் ஆவணங்களை ஸ்கேன் செய்வதனை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

இந்த கருத்திட்டத்திற்கான WIPO இன் தொழில்நுட்ப உதவி தொடர்பான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதி பரிந்துரைகளுக்காக சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக குறித்த அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைக்காக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### 2.4.2. ஆக்கவுரிமைகள் பிரிவு

**ஆக்கவுரிமைகள்**

2024 ஆம் ஆண்டில், மொத்தம் 187 ஆக்கவுரிமைகள் வழங்கப்பட்டதுடன், அவற்றில் 40[2] உள்நாட்டு ஆக்கவுரிமைகள் வழங்கப்பட்டன.

2024 ஆல் வழங்கப்பட்ட 40 உள்நாட்டு ஆக்கவுரிமைகளுள், 2023 இல் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களிலுருந்து 02 ஆக்கவுரிமைகளும் 2022 இலிருந்து 13, 2021 இலிருந்து 6, 2021 இலிருந்து 7, 2019 இலிருந்து 7 ஆக்கவுரிமைகளும், 2013 தொடக்கம் 2018 வரையிலான காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து 5 ஆக்கவுரிமைகளும் வழங்கப்பட்டன.

மேலதிகமாக, 2024 இல் வழங்கப்பட்ட 40 உள்நாட்டு ஆக்கவுரிமை பத்திரங்களில், 18 பத்திரங்கள் (45.0%) தனிநபர்களுக்கும், 13 பத்திரங்கள் (32.5%) அரச பல்கலைக் கழகங்களுக்கும், 9 பத்திரங்கள் (22.5%) நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன. அத்துடன், 2024 ஆம் ஆண்டில் 849 ஆக்கவுரிமை புதுப்பித்தல்கள் பதிவு செய்யப்பட்டன.

**கைத்தொழில் வடிவமைப்புக்கள்**

2024 ஆம் ஆண்டில், மொத்தம் 213 கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்கள் பெறப்பட்டன - இது 2020 க்குப் பிறகு அதிக எண்ணிக்கையாகும். இதில் 171 உள்நாட்டு விண்ணப்பங்கள் காணப்பட்டதுடன், இது 2019 ஆம் ஆண்டிலிருந்தான காலப்பகுதியிலிருந்தான ஆகக் கூடுதலான உள்நாட்டு சமர்ப்பினைக் குறிக்கிறது.

2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த கைத்தொழில் வடிவமைப்புகளின் எண்ணிக்கை 80 ஆக காணப்படுவதுடன், 48 உள்நாட்டு விண்ணப்பங்களையும், 32 வெளிநாட்டு விண்ணப்பங்களையும் கொண்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில், 150 கைத்தொழில் வடிவமைப்பு புதுப்பித்தல்கள் பதிவு செய்யப்பட்டதுடன், 133 புதுப்பித்தல் விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. இது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் புதுப்பித்தல் விண்ணப்பங்களில் குறிப்பிடத்தக்க

அதிகரிப்பை பிரதிபலிப்பதுடன், இது தமது கைத்தொழில் வடிவமைப்புப் பதிவுகளைப் பேணுவதில் விண்ணப்பதாரிகளிடையே வளர்ந்து வரும் ஆர்வத்தைக் குறிக்கிறது.

[2] 2024 ஆம் ஆண்டின்படி, 250 உள்ளூர் காப்புரிமை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதுடன், ஆக்கவுரிமை பத்திரம் வழங்குவதற்கான தகுதியுடமையை தீர்மானிக்கும் அளவுகோளான புத்தாக்கம், கண்டுபிடிப்பு படிமுறை, கைத்தொழில் பிரயோகம் ஆகிய தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காக 265 பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க, 265 பரீட்சிப்புக்களில் 233 விண்ணப்பங்கள் குறைபாடுடையவையாக இருப்பது கண்டறியப்பட்டது

### 2.4.3. பொதுவான அடைவுகள்

**சிறந்த செயலாற்றுகை அறிக்கைக்கான போட்டி**

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் 2023 ஆம் ஆண்டின் பொதுத் துறையின் சிறந்த ஆண்டறிக்கைக்கான போட்டியில் திணைக்களம்சார் துறையில் போட்டியிட்ட தேசிய புலமைச் சொத்து அலுவலகம் இணக்கச் சான்றிதழை பெற்றுக் கொண்டது.

**வளவாளர் பங்களிப்பு**

தேசிய புலமைச் சொத்து அலுவலக ஊழியர்களின் ஆதரவுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தபட்டன.

- கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கங்களுக்கான புலமைச் சொத்து உரிமைகளின் பாதுகாப்பினை ஆதரவளிக்கும் நோக்கில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வடமேல் மற்றும் மத்திய மாகாண பாடசாலை ஆசிரியர்களுக்கான நாடளாவிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கான வளவாளர் பங்களிப்பு செய்யப்பட்டது.

- புலமைச்சொத்து மற்றும் ஆக்கவுரிமை அறிக்கை வரைவு தொடர்பான இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2024 ஜூன் 18 ஆம் திகதி அதன் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நாள் செயலமர்வுக்கான வளவாளர் பங்களிப்பு வழங்கப்பட்டது.

- கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியினால் 2024 ஜூலை 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட "X Ban 2024" கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக கண்காட்சியில் புலமைச் சொத்து அலுவலகம் பாடசாலை மாணவர்களுக்கு புலமைச் சொத்து பற்றி அறிவூட்டுவதற்கான தகவல் சாளரம் / சாவடியை நடத்தியது.

- பொறியியல் துறையில் புத்தாக்கங்களுக்கான ஆக்கவுரிமை பாதுகாப்பை ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்ட "டெக்னோ 2024" கண்காட்சியில் 2024 ஒக்டோபர் 11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் ஆக்கவுரிமை விழிப்புணர்வு மற்றும் தகவல் சாளரம் என்பன இடம்பெற்றிருந்தன.

- இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில், ஆக்கவுரிமை மற்றும் வியாபாரச் சின்ன பிரிவினரது உத்தியோகத்தர்களின் வளவாளர் பங்களிப்புடன் 2024 ஆகஸ்ட் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினருக்கான புலமைச் சொத்து, புத்தாக்கங்கள் மற்றும் ஆக்கவுரிமைகள் பற்றிய ஒரு பயிற்சி பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டது.

- கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கங்களுக்கான புலமைச் சொத்து உரிமைகளின் பாதுகாப்பினை ஆதரவளிக்கும் நோக்கில் கண்டுபிடிப்பாளர்கள் எதிர்கொள்ளும் ஆக்கவுரிமை தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதனை இலக்காகக் கொண்டு 2024 நவம்பர் 26 இல் நடைபெற்ற கலந்துரையாடலுக்கான வளவாளர் பங்களிப்பு வழங்கப்பட்டது.

## 2.5 சவால்கள்

- 200,000 அளவிலான வர்த்தக முத்திரை கோப்புகள் செயலில் உள்ளதுடன் 60,000 அளவிலான மூடிய கோப்புகளும் தற்போது பராமரிக்கப்படுகின்றன. செயலில் உள்ள கோப்புகள் அன்றாட நடவடிக்கைகளுக்கு உடனடியாக அணுகக்கூடியதாக உள்ளமையை உறுதிப்படுத்த, ஒரு பிரத்தியேக ஆவண காப்பகத்தை நிறுவுவது அவசியம். அத்துடன், அகற்றப்படுவதற்காக ஒதுக்கப்பட்டு, தற்போது பைகளில் வைக்கப்பட்டுள்ள 60,000 மூடிய கோப்புகளுக்கு பொருத்தமான சேமிப்பு அறைக்கான இடம் தேவையாக உள்ளது. ஆயினும், "சமாகம் மெதுர" கட்டிடத்திற்குள் வாடகைக்கு பெற்ற இடத்தில் அமைந்துள்ள தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் தற்போதைய வளாகத்தை மேலும் விரிவுபடுத்த முடியாது என்பதால், அவசியமான களஞ்சியத் தேவைகளுக்கு இடமளிப்பது ஒரு குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளது

- வியாபாரச் சின்ன பிரிவில், செயலிலுள்ள 200,000 இற்கு மேற்பட்ட கோப்புகளை முகாமை செய்வதற்கு வெறுமனே 18 உத்தியோகத்தர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட பணியாட்தொகுதி காரணமாக, சர்வதேச வியாபாரச் சின்னங்களின் பதிவுகள், பதிப்புரிமை தொடர்பான பணிகள் மற்றும் புவியியல் குறிகாட்டிகளின் பதிவு என்பன அடங்கலான மேலதிக பொறுப்புக்களையும் கையாள்வதற்கு குறித்த அதே உத்தியோகத்தர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர்.



இதற்கு மேலதிகமாக, தற்போதுள்ள உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிடத்தக்க சுமையை ஏற்படுத்தும் வகையில், கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்களுக்காக தகவல், புள்ளிவிவரங்கள் மற்றும் பல்வேறு அறிக்கைகளை தொகுத்தல் போன்ற பணிகளும் சுமத்தப்படுகின்றன.

திறமையானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான பொதுச் சேவையை வழங்குவதற்கு விசாலமான பணிச்சூழல் மற்றும் போதுமான ஊழியர்களை உறுதி செய்வதே முக்கிய சவாலாக உள்ளது.

- தேசிய புலமைச் சொத்து அலுவலகமானது புலமைச் சொத்து நிர்வாகத்தில் இலத்திரனில் கோப்பிடல் (ஈ-ஃபைலிங்), இலத்திரனியல் ஸ்கேனிங் (ஈ-ஸ்கேனிங்) போன்ற சர்வதேச ரீதியிலான முன்னேற்றங்களின் வேகத்திற்கு ஈடுகொடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயத்திலுள்ளது. இதை அடைவதற்கு, அலுவலகத்தின் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தவும் நவீனமயமாக்கவும் வேண்டியுள்ளது. உள்நாட்டு நிலைமைகள், செயல்பாட்டுத் தேவைகள் மற்றும் தேசிய ஒழுங்குமுறை கட்டமைப்புகளுடன் இணக்கத்தன்மையை உறுதி செய்து கொண்டே, உலக புலமைச்சொத்துக்கள் அமைப்பினால் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப தேவையான உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வது ஒரு சவாலாக உள்ளது

- சமீபத்திய ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார வீழ்ச்சி காரணமாக, ஆக்கவுரிமை விண்ணப்பங்களை கோப்பிடுவதில் 2024 ஆம் ஆண்டில் ஒப்பீட்டளவில் சரிவு ஏற்பட்டுள்ளது. அதேபோல, 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 இல் வழங்கப்பட்ட ஆக்கவுரிமைகளின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. ஆக்கவுரிமை விண்ணப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட 565 இரண்டாம் நிலை பரீட்சிப்புக்களில் (புத்தாக்க பரீட்சிப்பு), 401 நிராகரிக்கப்பட்டதாக அல்லது குறைபாடுடையதாக அடையாளங் காணப்பட்டது. அதற்கிணங்க, ஆக்கவுரிமை விண்ணப்பங்களை வெற்றிகரமாக கோப்பிடுவதை ஊக்குவித்தல் மற்றும் வருடந்தோறும் வழங்கப்படும் ஆக்கவுரிமைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் முக்கிய சவாலாக மாறியுள்ளது.

- அலுவலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் பதவிகளின் பற்றாக்குறை காரணமாக, தகவல் தொழில்நுட்ப பிரிவு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பயிற்சியாளர்களின் சேவைகளில் பெரிதும் தங்கியுள்ளது. இந்த பயிற்சியாளர்கள் தங்கள் பயிற்சியை முடித்து நிறுவனத்தை விட்டு வெளியேறும்போது, ஒவ்வொரு ஆறு மாதங்களவிலும் ஒரு புதிய குழு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இந்த தொடர்ச்சியான சுழற்சி பெரும் சவாலாக அமைந்துள்ளதுடன் தற்போதுள்ள

பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கும், தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கு நிரந்தர, அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்குமான அவசர தேவையை எடுத்துக்காட்டுகிறது.

## 2.6 எதிர்கால இலக்குகள்

- புலமைச் சொத்து ஆவணங்களை ஸ்கேனிங் செய்யும் பணியை நிறைவு செய்து அதனை இறுதி செய்தல்.
- புவியியல் குறிகாட்டிகளை பதிவு செய்தல் மற்றும் விழிப்புணர்வினை ஊக்குவித்தல்.
- மர்ராகேஷ் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பதிப்புரிமை விதிகளின் கீழ் புலமைச் சொத்து சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு ஏற்ப ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல் மற்றும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்.
- புலமைச் சொத்துரிமை உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பைத் தொடர்ந்து, சமர்ப்பிக்கப்பட்ட வேலைத் திட்டத்திற்கு முடிக்கப்படாது நிலுவையிலுள்ள கடமைகளை செய்துமுடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- கட்டமைக்கப்பட்ட ஆவண காப்பகமொன்றை உருவாக்குதல்.
- கூட்டு முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் சேகரிப்பு ரோயல்டி என்பற்றை நிருவகிக்கும் புதிய ஒழுங்குவிதிகளை உருவாக்குதல்.

- புவியியல் குறிகாட்டிகள், பதிப்புரிமைகள் மற்றும் வர்த்தகச் சின்னங்களின் பதிவுகளைப் பாதுகாப்பதுடன் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தலும் அமுலாக்கலும்.

- விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய கோப்பிடல்களை நிகழ்நிலை ஊடாக சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை பொதுமக்களுக்கு வழங்குதல்.

- ஆக்கவுரிமை மற்றும் கைத்தொழில் வடிவமைப்பு பதிவினை நிகழ்நிலையூடாக சரிபார்க்க பொதுமக்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

- ஆக்கவுரிமை பரீட்சிப்புகளின் (புதுமை) காலத்தை ஆகக் கூடுதலாக 08 மாதங்களாக குறைத்தல்.

- பதிவுகளை முழுமையாக டிஜிட்டல் மயமாக்க IPAS முறைமையில் அனைத்து ஆக்கவுரிமை மற்றும் கத்தொழில் வடிவமைப்பு தரவுகளையும் உள்ளீடு செய்தல்.

- தற்போது நடைமுறைப்படுத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை மேலும் விரிவுபடுத்துதல்.

- TISC நிகழ்ச்சித் திட்டத்தின் விரிவாக்கம் செய்தல்.

- தற்போது பயிலுனர் இணைப்புகளில் தங்கியிருப்பதை மாற்றும் வகையில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்திற்கு நிரந்தர உத்தியோகத்தரை நியமிப்பதன்மூலம் செயற்பாட்டு வினைத்திறனை அதிகரித்தல்.

- முன் கோப்பு ஸ்கேனிங் திட்டத்தை செயல்படுத்தவும்.

- NIPO இணையத்தளத்தை தரமுயர்த்துகிறது.

- NIPO கணினி வலையமைப்பு முறைமையை சீரமைப்புச் செய்தல்



எச்.எஸ்.ஹெட்டிஹெலகே புலமைச் சொத்து பணிப்பாளர் மா அதிபதி (பதில்கடமை)

# அத்தியாயம்

# 3



- **ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை**

**3. தலைப்பு 299**

**3. புலமைச் சொத்து நிதியம்**

## 3. ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை - தலைப்பு 299

## 3. 1 நிதிச் செயலாற்றுகை கூற்று - தலைப்பு 299

ஏசிஏ- எப்

**2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024 | | குறிப்பு | உண்மை நிலை 2024 | உண்மை நிலை 2023 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசிஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசிஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசிஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசிஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| 64,700,000 | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 58,329,149 | 48,039,988 | ஏசிஏ-3 |
| - | வைப்புகள் | | 33,904 | 77,104 | ஏசிஏ-4 |
| 5,000,000 | முற்பணக் கணக்குகள் | | 4,266,189 | 4,889,654 | ஏசிஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| 69,700,000 | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | 62,629,242 | 53,006,746 | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ ஸ்ரீ (அ)10(ஆ)** | | 62,629,242 | 53,006,746 | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | 254,350 | 619,903 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ ஸ்ரீ (இ)-(ஈ)** | | 62,374,892 | 52,386,843 | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 64,000,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்; | 5 | 59,700,274 | 50,309,711 | ஏசிஏ-2(ii) |
| - | ஏனைய பொருட்கள்; சேவைகள் | 6 | - | - | ஏசிஏ-2(ii) |
| - | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | - | - | ஏசிஏ-2(ii) |
| 700,000 | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | 327,983 | 406,114 | ஏசிஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசிஏ-2(ii) |
| 64,700,000 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | 60,028,257 | 50,715,824 | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| - | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | - | - | ஏசிஏ-2(ii) |
| | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | - | - | ஏசிஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசிஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசிஏ-2(ii) |
| - | திறன் விருத்தி | 14 | - | - | ஏசிஏ-2(ii) |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | ஏசிஏ-2(ii) |
| - | **மொத்த மூலதனம்; செலவினம் (எ)** | | - | - | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 33,904 | 77,104 | ஏசிஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 5,649,364 | 4,785,388 | ஏசிஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | 5,683,268 | 4,862,493 | |
| | **மொத்த செலவினம் ஐ ஸ்ரீ (ஊ10எ10ஏ)** | | 65,711,525 | 55,578,317 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ ஸ்ரீ (உ-ஐ)** | | (3,336,633) | (3,191,474) | |
| | **பணிமுற்பண சரிப்படு;த்தல் அறிக்கையின்;படி மீதி** | | (3,336,633) | (3,191,474) | ஏசிஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | - | ஏசிஏ-3 |

1

# 3.2 நிதி நிலைமை கூற்று - தலைப்பு 299

ஏசீஏ -பீ

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2024 ரூபா | 2023 ரூபா | |
|---|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 4,290,494 | 4,290,494 | # |
| **நிதி சொத்துக்கள்** | | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5ஃ5ஏ | 10,321,057 | 8,937,882 | # |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | | # |
| **மொத்த சொத்துக்கள்** | | 14,611,550 | 13,228,376 | # |
| **தேறிய சொத்துக்கள் ஃ உரிமைப் பங்கு** | | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 10,321,057 | 8,937,882 | # |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 4,290,494 | 4,290,494 | # |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | - | | # |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | | # |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 14,611,550 | 13,228,376 | # |

பக்க இலக்கம் 6 முதல் 21 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்ஃபின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 22 முதல் 26 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறி;க்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்;
பெயர்: கே.ஏ.விமலேந்திரராஜா
பதவி : செயலாளர்,
வர்த்தகம், வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சகம்
திகதி : 2025.02. 28

கணக்கீட்டு உத்தியோகத்தர்;
பெயர்:ஜீ. ஆர். ரணவக
பதவி :புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி
திகதி :2025.02. 28

பிரதான நிதி உத்தியோகத்தர்;;ஃ பிரதான கணக்காளர் ஃ
பணிப்பாளர்(நிதி)ஃஆணையாளர்(நிதி)
பெயர் : கே.ஏ.டி.ஜே. குருப்பு
திகதி :2025.02. 28

**K.A. Vimalenthirarajah**
Secretary
Ministry of Trade, Commerce, Food Security and Co-operative Development
No. 492, R.A. De Mel Mawatha,
Colombo 03.

**G.R. Ranawaka**
Director General of Intellectual Property
National Intellectual Property Office of Sri Lanka
Samagam Madura, 3rd Floor
400 D.R. Wijewardhana Mawatha,
Colombo 10.

**K.A.D.J.Kuruppu**
Accountant(Acting)
National Intellectual Property Office of Sri Lanka,
"Samagam Madura", 3rd Floor,
400, D.R. Wijewardana Mawatha,
Colombo 10.

2

## 3.3 காசுப்பாய்ச்சல் கூற்று – தலைப்பு 299

ஏசீஏ - சீ

### 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2024 ரூபா | 2023 ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 3,175,545 | 2,751,373 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 58,120,000 | 48,291,000 |
| முற்பணங்களை அறவிடல் | 3,598,380 | 5,187,876 |
| வைப்புக்களின் பெறுகை | 33,904 | 77,104 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **64,927,829** | **56,307,353** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 59,447,124 | 49,960,986 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 327,983 | 406,114 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 600,868 | 206,846 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 45,201 | 870,915 |
| முற்பணக் கொடுப்பனவு | 4,472,750 | 4,785,388 |
| வைப்புக் கொடுப்பனவு | 33,904 | 77,104 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **64,927,829** | **56,307,353** |
| **தொழிறபாட்டு செயறபாடுகளிலிருநதான தேறிய காசுப பாயசசல (இ)ஶ்ரீ(அ)-(ஆ)** | - | - |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள்; | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| மூலதன செலவினம் | - | - |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | - | - |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)ஶ்ரீ(ஈ)-(உ)** | - | - |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)ஶ்ரீ(இ)10(ஊ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள்; | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஓ)ஶ்ரீ(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)ஶ்ரீ(எ) 10(ஓ)** | - | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

3

## 3.4 நிதிக்கூற்றுக்கள் - தலைப்பு 299

**<u>அறிக்கையிடலின் அடிப்படை</u>**

1) **<u>அறிக்கையிடல் காலப்பகுதி</u>**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2024 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **<u>அளவீட்டுக்கான அடிப்படை</u>**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **<u>நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.</u>**

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) **<u>சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு</u>**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **<u>சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்</u>**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **<u>காசு மற்றும் காசுக்கு சமமானவை</u>**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2024 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* காசு மற்றும் காசுக்கு சமமானவை 2024 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே 'அறிக்கையிடலின் அடிப்படை'; இன் கீழ் ;வெளிப்படுத்; தப்படவேண்டும்.

## 3.5. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை – தலைப்பு 299

அட்டவணை - 13 : வருமான வரி சேகரிப்பின் செயலாற்றுகை (ரூ.000)

| வருமான குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | மூலம் | இறுதி | தொகை (ரூ.) | இறுதி வருவாய் மதிப்பீட்டின் % ஆக |
| - | - | - | - | - | - |

## 3. 6. ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதன் செயலாற்றுகை - தலைப்பு 299

அட்டவணை - 14 : ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதன் செயலாற்றுகை (ரூ.000)

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கீடுகள் | | தொகை (ரூ.) | பயன்படுத்தப்பட்ட நிதி இறுதி ஒதுக்கீட்டுத் தொகையின் % ஆக |
|---|---|---|---|---|
| | மூலம் | இறுதி | | |
| மீண்டுவரும் | 64,700 | 64,700 | 60,028 | 93% |
| மூலதனம் | 10,000 | 10,000 | 0 | - |

## 3. 7. நி.ஒ 208 – தலைப்பு 299 இன் பிரகாரம் ஏனைய அமைச்சின்/ திணைக்களத்தின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

அட்டவணை - 15 : நன்கொடைகள் மற்றும் ஏனைய மானியங்களின் செயலாற்றுகை (ரூ.000)

| சுட்டெண் | ஒதுக்கீடுகளைப் பெற்ற அமைச்சு / திணைக்களம் | ஒதுக்கீடுகளின் நோக்கம் | ஒதுக்கீடுகள் | | உண்மையானது | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | மூலம் | இறுதி | | |
| - | - | - | - | - | - | - |

## 3. 8. நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடுவதன் செயலாற்றுகை - தலைப்பு 299

**அட்டவணை - 16: நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடுவதன் செயலாற்றுகை**

(ரூ.000)

| சொத்துக் களின் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2022 ஆம் திகதியன்று பொருட்கள் மதிப்பாய்வு அறிக்கைக்கு அமைய மீதி | 31.12.2022 புதிய நிதி நிலைமை தொடர்பான அறிக்கைக்கு அமைய மீதி | எதிர்வரும் காலத்தில் கணக்கீடு செய்யப்பட உள்ளது | செயலாற் றுகையி னை % இல் அறிக்கை யிடுதல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | - | - | - | - |
| 9152 | இயந்திர உபகரணங்கள் – நிதியம் | 4,290 | 4,290 | - | - |
| 9153 | காணிகள் | - | - | - | - |
| 9154 | தொட்டு உணர முடியாத சொத்துக்கள் | - | - | - | - |
| 9155 | உயிரியில் விஞ்ஞானச் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை | - | - | - | - |
| 9180 | குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள் | - | - | - | - |

## 3. 9 கணக்காய்வு அறிக்கை – தலைப்பு 299

**தமிழ் மொழிபெயர்ப்பு**

**எனது இல. IMT/F/IPO/HO/FS/2024/07** **30.05.2025**

புலமைச் சொத்து பணிப்பாளர் மா அதிபதி.
இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்,

**2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம், 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தின் தலைப்பு 299 இற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் சுருக்க அறிக்கை**

1. **நிதிக்கூற்றுக்கள்**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, அத்தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாயச்சல் கூற்று, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுடன் தொடர்பான தகவல்கள் அடங்கலான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் – தலைப்பு 299 இன் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு அறிக்கைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை புலமைச் சொத்து அலுவலக தலைப்பு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் பற்றிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படைகளுக்கிணங்க காணப்படும் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதிநிலைமை, நிதிச் செயலாற்றுகை, அத்தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாயச்சல் கூற்றுக்களது எண்ணிக்கைசார் அம்சங்கள் தொடர்பிலான நியாயமான பார்வையினை நிதிக்க்கூற்றுக்கள் வழங்குகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 முக்கிய விடயம் – நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைகளை விபரிக்கும் குறிப்பு 1 இன் மீது கவனம் செலுத்தப்படுகிறது. அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்டவாறான 2024 டிசம்பர் 16 ஆம் திகதிய பொதுக் கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 06/2024 என்பவற்றிற்கு இணங்க, இலங்கையின் புலமைச் சொத்துக்கள் அலுவலகம், பாராளுமன்றம் மற்றும் திறைசேரியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு எந்த நோக்கத்திற்கும் பொருத்தமானதாக இருக்காது. இந்த அறிக்கையானது இலங்கை புலமைச் சொத்துக்கள் அலுவலகம், திறைசேரி மற்றும் இலங்கைப் பாராளுமன்றத்தின் பாவனைக்காக மாத்திரம் பிரதானிக்கப்படுகின்றது. இவ்விடயத்தில் வெளிப்படுத்தப்பட்ட கருத்து மாற்றப்படவில்லை.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் இடைப்பட்ட கால நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஏடுகள் மற்றும் அறிக்கைகளை அலுவலகம் பேணிச் செல்ல வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம், தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதிக் கட்டுபாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வதுடன், எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் காணப்பட முடியுமானதான இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- தெரிவித்துக் கொண்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் என்பன மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது நான் மேற்கொண்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, உள்ளக கணக்காய்வு பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு ஒரு பயனுறுதிமிக்க முறைமையொன்று உள்ளது என்பதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், அறிக்கையின் பத்தி 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளின்படி, அந்த தேவை பூர்த்தி செய்யப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகளை நிறைவேற்றாமை

(அ) செயல்திட்டத்தின் கீழ் 50 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும், 2 நிகழ்ச்சிகள் மட்டுமே புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தினால் நடாத்தப்பட்டது.

(ஆ) புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தை புதிய நிரந்தர அலுவலகக் கட்டிடமொன்றுக்கு இடம் மாற்றுவதற்கு 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும், அந்நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

(இ) இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்திடமிருந்து ஒரு சேவையக இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக 2016 டிசம்பர் 30 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டதுடன், கொள்வனவு மற்றும் பராமரிப்புக்காக அன்றைய தினம் 32.5 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது. சேவை வழங்குனர்களால் ஒப்பந்தம் மீறப்பட்டதன் காரணமாக, 2020 பெப்ரவரி 20 ஆம் திகதிய CP/20/0139/215/009 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மீண்டும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும், இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனையடுத்து, சேவை வழங்குனருக்கு செலுத்தப்பட்ட தொகையை நியாயமான முறையில் தீர்க்க வேண்டியதன் அவசியம் பற்றிய உண்மைகளை முன்வைத்து நிரல் அமைச்சினது செயலாளருக்கும், டிஜிட்டல் அமைச்சிற்கும் அனுப்பப்பட்ட 2025 பெப்ரவரி 24 ஆம் திகதிய NIPO/TT/6-4 (iv) ஆம் இலக்க கடிதத்தினூடாக கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

## 1. நல்லாளுகை

### 1.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக நான்கு வருட காலப்பகுதியில் நிரந்தர கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.

## 2. மனித வள முகாமைத்துவம்

அ) 10 புலமைச் சொத்து உத்தியோகத்தர் பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2016 டிசம்பர் 20 ஆம் திகதியிடப்பட்ட DMS/1120 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிந்த போதிலும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் பதவிகள் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து 08 வருடங்களாக பதவிகள் வெற்றிடமாகவே தொடர்ந்திருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி இருந்தபோதிலும், மீளாய்வின் கீழ் உள்ள ஆண்டு இறுதி வரை ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை. 50% கட்டணமான ரூபா. 206,508 இனை பரீட்சைத் திணக்களத்திற்கு செலுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டு, கட்டணம் செலுத்தப்பட்டிருந்தன; இருப்பினும், 2024 டிசம்பர் 19 ஆம் திகதி 09 மாத கால தாமத்துடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட்டிருந்து.

ஆ) 8 புலமைச் சொத்து உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனுமதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2023 டிசம்பர் 06 ஆம் திகதியிடப்பட்ட DMS/1120/VOL 11 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. 50% கட்டணமான ரூபா. 533,263 இனை பரீட்சைத் திணக்களத்திற்கு 2024 செப்டம்பர் 09 ஆம் திகதி செலுத்தப்பட்டது; இருப்பினும் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை.

இ) 2024 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் மேலுள்ள பதவி வெற்றிடங்கள் காணப்படுவதானது வியாபாரச்சின்ன மற்றும் ஆக்கவுரிமை பிரிவுகள் தமது உச்சபட்ச செயல்திறனில் செயலாற்றுவதற்கான ஆற்றலில் நேரடியாக தாக்கம் செலுத்து

டபிள்யூ.ஜீ.ஆர்.என். வீரக்கொடி
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் சார்பாக

## 3. 2024 ஆம் ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை - புலமைச் சொத்து நிதியம்

### 3. 10 நிதிச் செயலாற்றுகை கூற்று – புலமைச் சொத்து நிதியம்

புலமைச் சொத்து நிதியம்

2024.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| | குறிப்புக்கள் | 2024.12.31 | 2023.12.31 |
|---|---|---|---|
| **வருமானம்** | | ரூ. | ரூ. |
| வியாபாரச் சின்னங்களின் வருமானம் | 3 | 79,517,675 | 67,913,103 |
| ஆக்கவுரிமைகளின் வருமானம் | 3 | 7,494,665 | 6,707,171 |
| கைத்தொழில் வடிவமைப்புக்களின் வருமானம் | 3 | 492,392 | 391,958 |
| ஏனைய வருமானங்கள் | 4 | 454,081 | 588,142 |
| முதலீட்டு வட்டி வருமானங்கள் | 5 | 176,407,646 | 299,516,901 |
| **மொத்த வருமானம்** | | **264,366,459** | **375,117,275** |
| **செலவுகள்** | | | |
| சம்பள ஊதியங்கள் மற்றும் ஊழியர் பயன் தொகைகள் | 2 | 7,045,653 | 4,595,371 |
| கொடைகள் மற்றும் ஏனைய பரிமாற்றுக் கொடுப்பனவுகள் | 2 | 2,145,443 | 2,350,157 |
| விநியோகங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | 2 | 55,855,648 | 53,829,046 |
| ஏனையவை | 2 | 602,358 | 225,065 |
| தேய்மானம் மற்றும் கடன்தீர் நிதி நிதிச் செலவு | 2 | 8,865,017 | 5,692,703 |
| மொத்தச் செலவுகள் | | **74,514,119** | **66,692,342** |
| **காலப்பகுதிக்கான மிகை/ (குறைபாடு) /வருமானம்** | | **189,852,340** | **308,424,933** |

20 | Page

## 3. 11 நிதி நிலைமை கூற்று – புலமைச் சொத்து நிதியம்

புலமைச் சொத்து நிதியம்

2024.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான கூற்று

| | குறிப்புக்கள் | 2024.12.31 | 2023.12.31 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | ரூ. | ரூ. |
| **அசையும் சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனான விடயங்கள் | 8 | 1,666,768 | 2,446,946 |
| மீதமுள்ள எழுதுபொருட்களின் இருப்பு | 1 | 8,789,357 | 5,935,144 |
| கிடைக்கப்பெற வேண்டிய வருமானங்கள் | 9 | 27,590,578 | 235,940,624 |
| குறுகிய கால முதலீடுகள் | 7 | 1,568,384,661 | 1,165,841,859 |
| முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | | 403,916 | |
| | | 1,606,835,280 | 1,410,164,573 |
| **அசையாத சொத்துக்கள்** | | | |
| சொத்து,பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் | 6 | 35,745,684 | 40,448,574 |
| கிடைக்கப்பெற வேண்டிய மீளளிப்புக்கள் – புலமைச் சொத்து விற்பனை ஊக்கவிப்பு நிலையங்கள் | | 22,298,751 | 22,298,751 |
| மொத்த சொத்துக்கள் | | 58,044,435 | 62,747,325 |
| | | 1,664,879,714 | 1,472,911,898 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| சேரல் செலவுகள் | 11 | 6,540,816 | 5,068,875 |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | | 128,380 | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 6,669,196 | 5,068,875 |
| தேறிய சொத்துக்கள் | | 1,671,548,518 | 1,477,980,773 |
| **தேறிய சொத்துக்கள் / உரிமை முதல்** | | | |
| திரண்ட மிகை / குறைபாடு | | 1,658,210,518 | 1,468,102,178 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை முதல் | | 1,658,210,518 | 1,468,102,178 |

கே.ஏ.டி.ஜே. குருப்பு
கணக்காளர்

කේ.ඒ.ඩී.ජේ. කුරුප්පු
ගණකාධිකාරී(වැ.බ.)
ශ්‍රී ලංකාවේ ජාතික බුද්ධිමය දේපළ කාර්යාලය
"සමාගම් මැදුර", 3 වන මහල
400, ඩී. ආර්. විජේවර්ධන මාවත,
කොළඹ 10

கீதாஞ்சலி ஆர்.ரணவக
புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அ.அ. சட்டத்தின் 154 ஆவது உறுப்புரையின் மூலம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள தத்துவங்களின் பிரகாரம் புலமைச் சொத்து நிதியத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்யும் பணிக்காக 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் 176 (5) ஆம் பிரிவிற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ள மேற்படி நிதிக் கூற்று 2024.02 ...... ஆம் திகதி அனுமதிக்கப்பட்டது.

G.R. Ranawaka
Director General of Intellectual Property
National Intellectual Property Office of Sri Lanka
Samagam Madura, 3rd Floor
400 D.R. Wijewardhana Mawatha,
Colombo 10.

கே.ஏ. விமலேந்திரராஜா
செயலாளர் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சகம்

K.A. Vimalenthirarajah
Secretary
Ministry of Trade, Commerce, Food
Security and Co-operative Development
No. 492, R.A. De Mel Mawatha,
Colombo 03.

19 | Page

## 3. 12 காசுப்பாய்ச்சல் கூற்று – புலமைச் சொத்து நிதியம்

புலமைச் சொத்து நிதியம்

2024.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான இணைந்த நிதிப் பாய்ச்சல் கூற்று

நேரடி முறைக்கு ஏற்ப நிதிப் பாய்ச்சல் கூற்று

| | 2024.12.31 | 2023.12.31 |
|---|---|---|
| **நடைமுறைச் செயற்பாடுகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்** | ரூ. | ரூ. |
| **வரவுகள்** | | |
| வரிகள் | 3,550 | 4,075 |
| பொருட்கள் மற்றும் செவைகளை விற்பனை | 131,257,098 | 112,518,348 |
| வட்டி வரவுகள் | 384,757,670 | 83,535,609 |
| ஏனைய வரவுகள் | 788,311 | 2,550,902 |
| **கொடுப்பனவுகள்** | | |
| ஊழியர்களுக்கான செலவு | (5,186,607) | (4,584,780) |
| வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகள் | (63,224,291) | (52,524,049) |
| ஏனைய கொடுப்பனவுகள் | (2,921,542) | (4,183,066) |
| **நடைமுறைச் செயற்பாடுகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்** | **445,474,190** | **137,317,040** |
| **முதலீட்டு நடவடிக்கைகளால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்கள்** | | |
| ,இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு | (4,393,430) | (17,174,724) |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான வருமானங்கள் | | - |
| முதலீடுகள் காலம் பூர்த்தியடைவதனால் கிடைக்கும் வருமானங்கள் | 3,547,841,630 | 1,112,709,277 |
| முதலீடுகளைக் கொள்வனவு செய்தல் | (3,950,384,432) | (1,201,941,691) |
| **முதலீட்டு நடவடிக்கைகளால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்கள்** | **(406,936,233)** | **(106,407,138)** |
| **நிதிச் செயற்பாடுகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்கள்** | | |
| குத்தகைப் பணத்தினை மீளச் செலுத்துதல் | (3,550) | (6,549) |
| அரசிற்கான பகிர்ந்தளிப்புக்கள் | (39,314,585) | (37,703,279) |
| **நிதிச் செயற்பாடுகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்கள்** | **39,318,135** | **37,709,828)** |
| காசு மற்றும் காசுக்கு சமனான விடயங்களின் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | 780,178 | (6,799,926) |
| 2024.01.01 ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்கு சமனான விடயங்கள் | 2,446,946 | 9,246,872 |
| 2023.12.31 ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்கு சமனான விடயங்கள் | **1,666,745** | **2,446,946** |

21 | Page

புலமைச் சொத்து நிதியம்

2024.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான உரிமை முதல் மாற்றமடைதல் தொடர்பான கூற்று

| | வெளியிடப்பட்ட மூலதனம் | பிடித்து வைக்கப்பட்ட இலாபம்/ நட்டம் | மற்ற இருப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **2023.01.01ஆம் திகதியன்று மீதி** | 1,153,970,944 | - | 5,578,250 | 1,159,549,224 |
| முன்னைய வருடத்திற்கான சீராக்கல்கள் | - | 128,021 | - | 128,021 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | 308,424,933 | | 308,424,933 |
| **2023.12.31 ஆம் திகதியன்று மீதி** | **1,153,970,974** | **308,552,954** | **5,578,250** | **1,468,102,178** |
| **2024.01.01 ஆம் திகதியன்று மீதி** | 1,462,523,928 | - | 5,578,250 | 1,468,102,178 |
| முன்னைய வருடத்திற்கான சீராக்கல்கள் | - | 256,000 | | 256,000 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | 189,852,340 | - | 189,852,320 |
| **2024.12.31ஆம் திகதியன்று மீதி** | **1,462,523,928** | **190,108,320** | **5,578,250** | **1,658,210,498** |

## 3. 13 நிதிக் கூற்றுக்கள்– புலமைச் சொத்து நிதியம்

<u>இறுதிக் கணக்கிற்கு ஏற்புடையதான கணக்குக் குறிப்புக்கள்</u>

<u>அடிப்படைக் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கூற்றுக்கள்</u>

- 2024 சனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதி மேற்படி நிதிக் கூற்றுக்களுக்கு உரிய அறிக்கையிடல் காலப்பகுதியாகும்.
- நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் அண்ணளவான ரூபாயில் முன்வைக்கப்பட்டு உள்ளது.
- இலங்கையின் அரச கணக்கீட்டுத் தரங்களுக்கு ஏற்ப கணக்குகள் தயாரிக்கப்பட்டு உள்ளன.
- நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும்போது வரலாற்று ரீதியான செலவுகள் எண்ணக்கரு அடிப்படையாகக் கொள்ளப்பட்டு உள்ளது . மேற்படி கணக்குகளைச் சமர்ப்பிக்கும்போது பணவீக்கத்திற்காக சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.
- பௌதீக ரீதியானது ஒரே விதமானது மற்றும் ,தொடர்ச்சியாக நிலைபெறுதல் என்பவற்றின் சேரல் அடிப்படை தொடர்பான எண்ணக்கருவினை அடிப்படையாகக்கொண்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதுடன் அங்கு உரிய பொருத்தப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு உள்ளது.
- சொத்துக்களை தேய்மானம் செய்யும் கொள்கைகள்

நிலையான சொத்துக்கள் நேர்கோட்டு தேய்மானத்தின் அடிப்படையில் சொத்தின் பயனுள்ள வாழ்நாளில் தேய்மானம் செய்யப்படுகின்றன.

**சொத்துக்களை தேய்மானம் செய்யும் சதவிகிதம்.**

| | |
|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| அலுவலக பொருத்துதல்கள் | 10% |
| தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 05% |
| மோட்டார் வாகனங்கள் | 10% |
| திரைச் சீலைகள் | 20% |
| ஏடுகள் | 10% |
| கணினிகள் | 25% |
| பிணைய கேபிளிங் | 5% |

- முதலீடுகள் அவற்றின் முக மதிப்பு மற்றும் விலைக்குக் குறைவாகக் கணக்கிடப்படுகின்றன.
- சேரல் செலவுகள் 2025 பெப்புரவரி 10 ஆந்திகதி வரை கணக்கிடப்பட்டு உள்ளது.
- 31.12.2024 நிலவரப்படி, மீதமுள்ள எழுதுபொருட்களின் இருப்பு ரூ. 8,789,357

23 | Page

❖ சேவைகளை வழங்குவதற்காக கணக்குகள் வருடத்திற்கு உரிய வகையில் கிடைக்கப்பெறும் வருமானம், கணக்குகள் வருடத்திற்கு உரிய வகையில் அடையாளம் காணப்படுவதுடன், முதலீடுகளுக்காகக் கிடைக்கப்பெறும் வருமானத்தினை காலத்திற்காக சமவிகித முறையொன்றிற்கு அமைய கணக்குகளில் சேர்க்கப்பட்டு உள்ளது.

❖ புலமைச் சொத்துக்கள் நிதியத்தினை நிருவகிக்கும் நடவடிக்கைகளுக்காக புலமைச் சொத்து அலுவலகத்தின் அலுவலர்களுக்கு செலுத்தப்படும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் என்பன உட்பட அரசிறைச் செலவுகளுக்காக ரூ.59,700,274 தொகை ஒதுக்கீட்டுச் செலவுகள் தலைப்பிலக்கம் 299 இன் கீழ் அரசினால் ஏற்கப்பட்டு உள்ளது.

❖ அப/15/0272/625/007 ஆம் இலக்க மற்றும் 2015.04.23 ஆந்திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் புலமைச் சொத்துக்கள் விற்பனை ஊக்குவிப்பு மத்திய நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகையினை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்காக அமைச்சரவை அனுமதி 2015.04.23 ஆந்திகதி கிடைக்கப்பெற்று உள்ளது. அதற்கு அமைய உரிய நிதியினை மீளளிப்பு செய்யுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

❖ புலமைச் சொத்து நிதியத்திற்கு எதிராக தொடரப்பட்ட எதுவித வழக்குகளும் இல்லை. புலமைச் சொத்து அலுவலகம் பிரதான இரண்டு சந்தர்ப்பங்களில் புலமைச் சொத்து விடயத்திற்கு உரிய வகையில் தரப்பினர் ஒருவராக பெயரிடப்படும்.

I. புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட புலமைச் சொத்து விடயத்துடன் தொடர்பான ஒரு - தரப்புத் தீர்மானங்களுக்கு, விஷேடமாக வியாபாரச் சின்னங்கள் தொடர்பான தீர்மானங்களுக்கு எதிராக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்தல்.

II. வியாபாரச் சின்ன விண்ணப்பங்கள் தொடர்பான எதிர்ப்புக்களை முன்வைக்கும் போது புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதியினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் ஒன்றிற்கு எதிராக உரிய தரப்பினர்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தல்

❖ ஐந்தொகை தினத்திற்கு பின்னர் நிகழ்வுகள் இல்லை.

❖ தொடர்புடைய தரப்பினர்களுடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை

## 3. 14 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை - புலமைச் சொத்து நிதியம்

**அட்டவணை - 17 : ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை**

(ரூபா.000)

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், பூர்த்தி செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீடுகள் அளவில் % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| **மீண்டெழும்** | 118,262.00 | 118,262.00 | 65,046.74 | 55.00% |
| **மூலதனம்** | 38,625.00 | 38,625.00 | 9,467.38 | 24.51% |

## 3. 15. கணக்காய்வு அறிக்கை – புலமைச் சொத்து நிதியம்

**தமிழ் மொழிபெயர்ப்பு**

**எனது இல. IMT/F/IPF/ 2024/07** **24.06.2025**

புலமைச் சொத்து பணிப்பாளர் மாஅதிபதி
புலமைச் சொத்து நிதியம்

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம், 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான புலமைச் சொத்து நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட, ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

### 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, அத்தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாயச்சல் கூற்று, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுடன் தொடர்பான தகவல்கள் அடங்கலான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய இலங்கை தேசிய புலமைச் சொத்து நிதியத்தின் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு அறிக்கைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, உரிய நேரத்தில் எனது அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் "முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை" எனும் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள உண்மைகளின் விளைவுகளைத் தவிர, 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் நிதிநிலைமை, நிதிச் செயலாற்றுகை, உரிமை மாற்றல் கூற்று, அத்தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாயச்சல் கூற்று என்பவை பற்றிய, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணைங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினை நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 4.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இவ்வறிக்கையின் "**நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பு**" என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 4.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவ மற்றும் நிர்வாக குழுமத்தின் பொறுப்புக்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

வேறு மாற்றீடுகள் இல்லாதபோது நிதியத்தை கலைப்பதற்கோ அல்லது அதன் இயக்க செயற்பாடுகளை முடிவுறுத்துவற்கோ முகாமைத்துவம் நாடினாலோ நாடாத வரையில், நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில், நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையை கருத்திற்கொண்டு தொடர்ந்து செல்வதற்கான திறனைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அத்துடன், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவினடிப்படையில் கணக்கீட்டினைத் தயாரித்தலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பிலான தகவல்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கைகளது செயல்முறையினை ஆராயும் பொறுப்பு நிர்வாக அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிதியத்தின் நிதிப் பதிவேடுகளின் செயல்முறையை ஆராயும் பொறுப்பு நிர்வாக குழுமத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தினால் வருடாந்த மற்றும் நாட்பட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தமது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய புத்தகங்களும் ஆவணங்களும் பேணுப்படுதல் வேண்டும்.

## 4.4 நிதி அறிக்கையின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- தெரிவித்துக் கொண்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றி அளவு ரீதியான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது குறித்து பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்கான நிதியத்தின் தொடர்ச்சியின் அடிப்படையை மாற்றியமைப்பதன் பொருத்தப்பாட்டை தீர்மானிக்கப்பட்டது. அளவு ரீதியான நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் தீர்மானித்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் குறித்து எனது கணக்காய்வு அறிக்கை கவனம் செலுத்த வேண்டுமென்பதுடன் வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிட்டால், எனது கருத்து திருத்தப்பட வேண்டும். இருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளைப் பொறுத்து தொடர்ச்சி முடிவுறலாம்.

